Registered as a Newspaper in Ceylon ★ விலை சதம் 10


# ஈழநாடு

மலர் 7 EELA NADU இதழ் 182

National Tamil Daily தேசிய தினசரி

(13-8-65)

விசுவாவசு ஆடி 29 ரபி அகிர் பிறை 15 வெள்ளிக்கிழமை



நீடித்த பாவனைக்கு

சொனென்ஷீன் சொனென்ஷீன்

பற்றறிகளையே உபயோகியுங்கள்

வடமாகாண ஏகவினியோகஸ்தர்கள்:-

துரை அன் கோ

23/3, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## அடுத்த மாதம் ஆசிரியர் தெரிவு

கொழும்பு, வியாழன்

இரண்டாயிரம் மாணவ ஆசிரியர்களையும் ஆயிரம் பட்டதாரிகளையும் ஆசிரிய சேவைக்கு கல்வி இலாகா தெரிவுசெய்யும். அக்டோபர் மாதத்திலிருந்து அடுத்த நிதிவருடத்துக்குள் மேலும் மூவாயிரம் ஆசிரியர்கள் தெரிவு செய்யப்படுவர்.

# வெளிநாட்டு உதவி தொடர்ந்து கிடைக்கும்

கொழும்பு, வியாழன்

முதல் ஐந்து வருடங்களுக்கும் ஒவ்வொரு வருடமும் வெளிநாட்டு பொருளாதார உதவி தொடர்ந்து கிடைத்து வரும் என்று அதிகார பூர்வமான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. உலக வங்கி ஒழுங்கு செய்த இந்த உதவித் திட்டத்தில் சேர்ந்துள்ள நாடுகளின் மற்றொரு கட்டம் இவ் வருட இறுதியில் நடைபெறும். இக் கூட்டத்தில் இலங்கைக்கு அடுத்த வருடம் அளிக்கும் உதவி பற்றிய திட்டம் ஆராய்ந்து முடிவு செய்யப்படும்.

## ரொடீஷியாவில் துருப்புக்களை உபயோகிப்பது தவறு

### பிரிட்டிஷ் மந்திரி கருத்து

லண்டன், ஆக. 12

தென் ரொடீஷியாவில் பிரிட்டன் துருப்புக்களை உபயோகித்தால் சாம்ராஜ்யத்தில் பெரும் பொருளாதார விளைவுகள் ஏற்படுவதுடன், அது பெரும் போராக மாறும் என்றும் பிரிட்டிஷ் காமன்வெல்த் மந்திரி திரு. பொட்டம்லி கூறினார். டலம்வாய்ந்த படைகள் ரொடீஷியாவில் இருப்பதாகவும், சாம்ராஜ்ய நாடுகளுக்கு இதனால் கடினமான விளைவுகள் ஏற்படும் என்றும் அவர் கூறினார்.

காங்கோவைப் போன்ற பொருளாதார நெருக்கடியை எதிர் நோக்கவேண்டியிருக்க வேண்டியிருக்குமென்றும் அவர் கூறினார்.

## 26 தொன் மீன் கிடைத்தது; கூட்டு ஸ்தாபன படகுக்கு!

கொழும்பு, வியாழன்

மீன்பிடி கூட்டுஸ்தாபனத்தின் மீன்பிடிக்கப்பல் 'கந்தாரா' நேற்று 26 தொன் எடையுள்ள மீன்களுடன் கொழும்புத் துறைமுகத்துக்கு வந்து சேர்ந்தது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களிலிருந்தும் இதர மீன்பிடி நிலையங்களிலிருந்தும் வந்து சேர்ந்த மீன்களுடன் 'கந்தாரா' கொண்டுவந்த மீனும் பாவனையாளர்களுக்கு இன்று விற்பனை செய்யப்பட்டது.

இம்மாதம் முதல் திகதி தொடக்கம் பாவனையாளர்களின் மீன் தேவையை கூட்டு ஸ்தாபனம் சமாளிக்கக்கூடியதாக இருக்கிறதென்று கூட்டு ஸ்தாபன சபைத் தலைவர் திரு. சாம்சில்வா தெரிவித்தார்.

## எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை

கொழும்பு. வியாழன்

இலங்கையில் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை நிறுவும் திட்டம் பற்றி இம்மாத முடிவுக்குள் இறுதி முடிவு எடுக்கப்படுமென்று பெட்ரோலிய கூட்டுஸ்தாபன சபைத் தலைவர் திரு கே. ஆழ்வாப்பிள்ளை இன்று காலை தெரிவித்தார்.

எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை நிறுவுவதற்கு மூன்று நாடுகள் முன்வந்துள்ளன.

## இதுவும் ஒரு காரணம்

ஸ்டொக்ஹோம், ஆக. 12

மாணவர்களை அதிக நேரம் பாடசாலைகளில் வைத்திருப்பதுவும் மாணவர்களிடையே குற்றவாளிகள் அதிகரிப்பதற்கு ஒரு காரணமெனவும் அதிகரித்துவரும் குற்றங்களுக்கான காரணங்கள் பற்றி ஆராய்ந்த ஐ. நா. குழு அபிப்பிராயம் வெளியிட்டுள்ளது. வயது வருவதற்கு முன்னரேயே பால் உணர்ச்சியில் நாட்டம் கொள்வதுவும் குற்றங்கள் அதிகரிப்பதற்குக் காரணம் எனத் தெரிவிக்கப்பட்டது.

## ஏற்பினால் மரணம்

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணத்தை சேர்ந்த திருமதி நடராசா, என்ற 59 வயதும் பெண் ஏற்பினால் யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் மரணமானார்.

மரணவிசாரணையில் காலஞ்சென்றவரின் மருமகன் கணேந்திரன், டாக்டர் சுந்தரசிங்கம் ஆகியோர் சாட்சியமளித்தார்கள்.

மரணவிசாரணை அதிகாரி திரு. ஏ. அமிர்தலிங்கம் இயற்கை மரணமெனத் தீர்ப்பளித்தார்.

## குடிநீர் வசதி

கினிகொச்சி, வியா

கினிகொச்சி கதிர்காமயாத்திரீகர் தொண்டர்சபையினர் இன்றுதொடக்கம் 15-ம் திகதி வரையும் கினிகொச்சி புகையிரதநிலையத்தில் கதிர்காம யாத்திரீகர்களுக்கு தாகத்தை தீர்க்கும்முகமாக தண்ணீர் பந்தல் அமைத்து தண்ணீர் விநியோகம்செய்துவருகிறார்கள்.

## மாணவர்கள் 'ஈழநாடு' வந்தனர்

யாழ்ப்பாணம். வெள்ளி

ஆனைக்கோட்டை அமெரிக்க மிஷன் தமிழ் கலவன் பாடசாலையைச் சேர்ந்த சுமார் 50 மாணவ மாணவிகள் நேற்று பகல் 'ஈழநாடு' காரியாலயத்துக்கு வந்து 'ஈழநாடு' அச்சுக்கப் பகுதியையும் மற்றும் பகுதிகளையும் பார்வையிட்டனர். மேற்படி பாடசாலை தலைமை ஆசிரியர் திரு. ... மற்றும் ஆசிரிய, ஆசிரியைகள் ... வந்தனர்.

# பல்கலைக்கழக பிரிவு அமைக்கும் திட்டம்

பம்பலப்பிட்டி, வியாழன்

சர்வகலாசாலை பிரிவுகளை அமைப்பது சம்பந்தமாக இறுதித் திட்டம் தயாரிப்பதற்கு மந்திரிசபை உபகமிட்டி யொன்று தெரிவுசெய்யப்பட்டுள்ளது. இராஜாங்க மந்திரி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன, கல்வி மந்திரி ஐ. எம். ஆர். ஏ. இரியகொல்லை, ஸ்தலஸ்தாபன மந்திரி செனட்டர் திரு எம். திருச்செல்வம் ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

பல்கலைக்கழக பிரிவுகள் அமைப்பது பற்றி மந்திரிசபை விவாதித்தது அப்பொழுது பல்கலைக்கழகப் பிரிவுகளை அமைக்கவேண்டியதன் அவசியம் பற்றியும் அதற்கான விளக்கம் திட்டம் பற்றியும் ஆராயப்பட்டது மாணவர் தொகை கல்வி பெறுவதற்கு இடவசதியில்லாத காரணமாக கல்விபெறும் வாய்ப்பில்லாதிருக்கும் மாணவர் தொகை பற்றியும் சர்வகலாசாலை உபஅதிபர் யட்சமரை மந்திரிசபை கேட்டுக்கொண்டது.

## வீட்டில் திருட்டு

கொஸ்லாந்தை, வியாழன்

கொஸ்லாந்தை மீரியபத்தை தோட்ட மனேஜர் திரு. ஆர். எம். ஹிப்பனின் வீட்டில் சென்ற சனிக்கிழமை அத்தோட்டத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள் இருவர் மனேஜர் இல்லாத நேரத்தில் உட்புகுந்து பல பெறுமதியான பொருட்களை திருடியதோடு, யன்னல் கண்ணாடிகளையும் கதவுகளையும் உடைத்துவிட்டு சென்றுவிட்டதாக பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது. இதுசம்பந்தமாக பொலிஸார் புலன்விசாரணை செய்துவருகின்றனர்.

## 'இப்போது நிலவும் தேசிய ஒற்றுமையை எவராலும் முறியடிக்கமுடியாது'

### மந்திரி சுகததாசா அறிவிப்பு

கல்முனை, வியாழன்

'எமது அரசாங்கம் ஏழு அரசியல் கட்சிகளின் கூட்டாக இருந்தபோதிலும் அதன் முதல் நோக்கம் தேசிய ஒற்றுமையே, இதன் காரணத்தினால் தான் தேசிய அரசாங்கத்தை அமைத்தோம், இப்பொழுது இலங்கைத் தீவிலே நிலவிவரும் தேசிய ஒற்றுமையை எவராலும், எப்பொழுதும் முறியடிக்க முடியாது'

இவ்வாறு, விளையாட்டுத் துறை மந்திரி திரு, வி, ஏ. சுகததாசா கல்முனை உயர்நிலை வெஸ்லி கல்லூரி வருடாந்த விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார்

கல்லூரி முன்றலில் கல்லூரி அதிபராலும், மாணவர்களாலும் வரவேற்கப்பட்ட அமைச்சர் பெருமகிழ்ச்சியுடன் விளையாட்டுத் திடலுக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

## இடமாற்றம் நிறுத்தப்பட்டது

யாழ்ப்பாணம், வெள்ளி

வட்டுக்கோட்டை சிவன் நெசவு நிலையத்தில் நெசவாசிரியராகக் கடமையாற்றிய நெசவாசிரியர் திரு, க. காசிநாதனின் இடமாற்றத்தை மேற்படி நிலையத்தில் வேலை செய்வோரும் பொது மக்களும் ஆட்சேபித்ததைத் தொடர்ந்து மேலதிகாரி உடனடியாக நிறுத்தியுள்ளார்.

## புகையும் வயர்கள்!

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணத்தில் மழை பெய்தவுடன் வீடுகளுக்கும் ஸ்தாபனங்களுக்கும் மின்சார விநியோகத் தொடர்பு ஏற்படுத்தும் வயர்களிலிருந்து புகை கிளம்பத்தொடங்கிவிடுகின்றன. சென்ற இரு தினங்களாகத் தொடர்ந்து பெய்யும் மழையால் புகை கிளம்பும் இடங்களிலிருந்து இப்போ நெருப்புப் பொறிகள் கிளம்புகின்றன. இதனால் என்ன அபாயங்கள் ஏற்படுமோ எனப் பொதுமக்கள் பெரிதும் அஞ்சுகிறார்கள்.

இதுபற்றி மின்சாரநிலையத்தாரிடம் கேட்டபோது மழை பெய்யும் சமயத்தில் இவ்விதம் நிலை ஏற்படுவது சகஜம் என்று தெரிவித்தார்கள் இவ்விதம் புகைபரவும் இடங்களில் தற்போது மின்சார நிலையத்தினர் சென்று கவனித்துவருகின்றனர்.

## தபாற் பெட்டி திறந்து கிடக்கிறது

யாழ்ப்பாணம், வெள்ளி

சித்தன்கேணி கலைநகரில் இதுவரை காலமும் தபாற் பெட்டி இல்லாமலிருந்தும் கலைநகர் வாசிகள் வட்டுக் கோட்டை இந்துக் கல்லூரிக்கு முன்னே நாட்டப்பட்டுள்ள தபாற்பெட்டிக்குள் கடிதங்களைப் போட்டு வந்தனர். இந்தத் தபாற்பெட்டியும் கடந்த ஒருவாரமாகத் திறந்து கிடப்பதால் இவ்வூர் மக்கள் கடிதம் போடமுடியாமற் கஷ்டப படுகின்றனர், இதுபற்றி சித்தன்கேணி கலைநகர் நேருஜி சனசமூக நிலையக் காரியதரிசி திரு. கா. க. தங்கரத்தினம் சித்தன்கேணி உபதபாற் கந்தோர் தபாலதிபருக்கு அறிவித்துள்ளார் எனத் தெரிகிறது.

## பலபகுதிகளில் நல்ல மழை

பம்பலப்பிட்டி, வியா.

நேற்று நாட்டின் பல பகுதிகளிலும் நல்ல மழை பெய்துள்ளது.

மத்துகமவில் 7 05 அங்குல மழை பெய்துள்ளது இங்கு அதிக அளவு மழை பெய்ததாக கணிக்கப்பட்டுள்ளது. மற்ற இடங்களில் பெய்த மழையின் அளவு வருமாறு: நெபோட: 6 07 அங்குலம், கட்டுநாயகா: 5 63 அங்குலம், களுத்துறை: 5.45 அங்குலம், இரத்மலானை: 4 10 அங்குலம் வத்தேகொட: 2.48 அங்குலம், ஹட்டன்: 2,38 அங்குலம், கொழும்பு: 2 30 அங்குலம், மரதங்கடவெல: 2.27 அங்குலம், வவுனியா: 2 08 அங்குலம், வத்தவல: 1 98 அங்குலம், கெபிட்டிகொலாவ: 1 60 அங்குலம், அநுராதபுரம்: 1 44 அங்குலம், வெலிச்சியகம: 1.28 அங்குலம், மிகிந்தலை: 1.22 அங்குலம், ஹிங்குராகொட: 1,04 அங்குலம்.

## உடனடியாக விலைகுறையாது

கொழும்பு. வியாழன்

வரவு - செலவுத்திட்டத்தில் இறக்குமதித் தீர்வைகள் நீக்கப்பட்ட விவசாய உபகரணப் பொருள்களில் மண்வெட்டியும் அலவாங்கும் சில. ஆனால் இவைகளின் விலைகள் உடனடியாக குறையமாட்டா. புதிய 'ஸ்டாக்குகள்' வந்து சேர்ந்தபின் இவ் வருட இறுதியில் தான் மண்வெட்டி அலவாங்குகளின் விலைகள் குறையுமெனத்தெரிகிறது.

## திருமலை கந்தசுவாமி கோவில் உற்சவம்

திருக்கோணமலை, வியா

திருக்கோணமலை திருவில்லூன்றிக் கந்தசுவாமி கோவில் 5-ம் நாள் உற்சவம் வருகிற ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் காலை விசேஷ அபிசேகமும் சண்முகார்ச்சனையும், பூஜையும் பகல் அன்னதானமும் நடைபெறும் மாலை விசேஷ மேளக்கச்சேரியும், குமாரி சே. கமலாம்பிகையின் இன்னிசைக் கச்சேரியும் நடைபெறும்.

## விபத்துக்கள்

கொஸ்லாந்தை, வியா.

திசமஹாராமைக்கருகில் கதிர்காம யாத்திரைக்குச் சென்று திரும்பிய ஒரு வாகனம் கவிழ்ந்ததன் காரணமாக அதில் சென்றுகொண்டிருந்த பிரயாணிகளில் பலர் காயமடைந்தனர். ஆனால் உயிர்ச்சேதமெதுவுமில்லை,

கொஸ்லாந்தைக் கருகாமையில் ஒரு பஸ்ஸுடன் கார் ஒன்று மோதுண்டதினால் இருவர் காயமடைந்தனர். இவர்கள் உடனடியாக கொஸ்லாந்தை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்வாக்கு

"ஆண்மையும் ஆற்றலும் நிறைந்தவனே சமயவுண்மையினை உணர வல்லவன்"

—விவேகானந்தர்


# ஈழநாடு

EELA NADU National Tamil Daily. Post Box 49. Jaffna.
Grams: "EELANADU" Jaffana
Phone: 389

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு
ஆடி 29 (13-8-65)


## மீண்டும் காஷ்மீர் பிரச்னை

இரண்டு மூன்று துரதிஷ்ட சம்பவங்களுடன் காஷ்மீர் பிரச்னை மீண்டும் முக்கியத்துவமடைந்துள்ளது. சென்ற சில தினங்களில் காஷ்மீரில் கைகலப்புச் சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. உயிர்ச்சேதமும் பொருட்சேதங்களும் ஏற்பட்டுள்ளன; அமைதியையும் உலக சமாதானத்தையும் விரும்பும் மக்களுக்கு இச்சம்பவங்கள் நிச்சயம் பெரும் கவலையளிக்கும்.

காஷ்மீரில் பாகிஸ்தானியர் ஊடுருவல் செய்து குழப்பமும் கலகமும் செய்வதாகவும் நாசவேலை செய்யும் நோக்கத்துடனேயே பாகிஸ்தானியர் ஊடுருவல் செய்வதாகவும் ஜம்மு காஷ்மீர் ராஜ்ய அரசாங்கமும் இந்திய மத்திய அரசாங்கமும் தெரிவிக்கின்றன. காஷ்மீரில் இந்திய அரசாங்கத்தை எதிர்த்து காஷ்மீர் மக்கள் 'புரட்சி' செய்வதாக பாகிஸ்தான் கூறுகிறது. இதில் எது உண்மை என்பது சிந்திக்கவேண்டிய விஷயம்.

இந்தியத் தலைவர்களும் பாகிஸ்தான் தலைவர்களும் உலக சமாதானமே தங்களின் நோக்கம், இலட்சியம் என்கையென்று கூறிவருகின்றனர். உலகசமாதானம் வாய்ப்பேச்சினால் ஏற்பட்டுவிடாது. ஒவ்வொரு செயலும் உலக சமாதானத்தை ஏற்படுத்தக்கூடியதாக இருக்கவேண்டும்.

பாகிஸ்தான், இந்தியா விஷயத்தில் ஒருவித 'பாஸிஸ' முறையையே கடைப்பிடித்து வந்திருக்கிறது. முன்னறிவித்தலோ, பேச்சுவார்த்தையோ எதுவுமின்றி ராணுவ நடவடிக்கைகளைக்கூட பாகிஸ்தான் இந்தியாவுக்கு எதிராக பல தடவைகளில் மேற்கொண்டிருக்கிறது. ஆங்கிலோ, அமெரிக்க உதவியுடனும் ஆதரவுடனும் அமைத்துக்கொண்ட படைப்பலத்தை இந்தியாவுக்கெதிராக பாகிஸ்தான் உபயோகித்திருக்கிறதென்பதும் பல சந்தர்ப்பங்களிலும் தெளிவாகியிருக்கிறது. மேற்கத்திய வல்லரசுகள் தவறான வழிகாட்டிய சம்பவங்களில் இதுவும் ஒன்று. தென்கிழக்காசிய கூட்டுப்பாதுகாப்பு ஒப்பந்த ஸ்தாபனம் என்ற 'சியாட்டோ' அமைப்பிற்கேற்ப பாகிஸ்தானில் அமெரிக்காவும் பிரிட்டனும் படைப்பலத்தைப் பெருக்கியதன் மூலம் ஆசியாவிலேயே சக்திவாய்ந்த ஒரே ஒரு நாட்டுக்குத் தொல்லைகொடுத்துள்ளன.

இன்று நிலைமை மோசமடைந்துள்ளது. உண்மை நிலை பற்றி ஆராய்ந்து தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டியது அவசியம். காஷ்மீர் நிலைமை பற்றி அங்கு போர்நிறுத்த எல்லை பற்றிக் கண்காணிப்பதற்காக இருக்கும் ஐ. நா. பார்வையாளர்கள் உண்மை விபரங்களை உடனடியாக வெளியிடவேண்டும். ஐ. நா. வின் உதவியுடன் இந்தியாவும் பாகிஸ்தானும் நேரடிப் பேச்சுவார்த்தை மூலம் இப்பிரச்னைக்கு இனியும் தாமதம் செய்யாது ஒரு நல்ல முடிவு காணவேண்டும். அபிவிருத்தி குறைந்த அரசுகள் என்பதை இந்தியாவும் பாகிஸ்தானும் மறந்துவிடக்கூடாது. வெளிநாட்டு உதவியுடன் எடுக்கப்படும் இராணுவ நடவடிக்கைகளில் எதுவும் இந்தியாவினதும் பாகிஸ்தானினதும் அபிவிருத்திக்குக் குந்தகம் செய்வதுடன் வருங்காலத்தில் இருநாடுகளையுமே நாசமாக்கிவிடும்.

புரட்சி என்றும் யுத்தம் என்றும் இருதரப்பினரும் வீராவேசப் பேச்சுகளாலும் வகுப்புவாதக் கூச்சல்களாலும் தத்தம் சமயத்துக்கு மக்களுக்கு உணர்ச்சியூட்டி கிளர்ந்தெழச் செய்யலாம். ஆனால் பொருளாதார அடிமைத்தனையில் மாட்டிவைத்த தலைவர்களை மக்கள் ஒருபோதும் மன்னிக்கமாட்டார்கள். இந்திய பாகிஸ்தான் தலைவர்கள் இதைக் கருத்திற்கொள்வது நல்லது.

# நல்லூர்க் கந்தனின் ஆன்மீகக் கோட்டை

— கண்ணப்பன் —

எந்நாளும் நல்லூரை
வலம்வந்து வணங்கில்
இடர்களெல்லாம் போகுமே'

யோகசுவாமிகளின் இவ்வருள்வாக்கை யாழ்ப்பாணத்தவர் யாவரும் பண்டு தொட்டு முழு உண்மையெனு நம்பி நாள்தோறும், சிறப்பாக திருவிழாக் காலத்திலும் நல்லூர்க் கந்தன் திருக்கோயிலை வலம்வந்து மனச்சாந்தி பெறுகிறார்கள். ஈழநாட்டில் எழிலுடன் விளங்கும் இத்திருக்கோயில் விழாக்காலத்தில் மட்டுமன்றிச் சாதாரண நாட்களிலும் அடியார்கள் நாடித்தேடித் தரிசிக்கும் ஒரு புனிதத்தலமாக விளங்குகிறது.

நல்லூரின் புராதன வரலாறு பலவேறு கட்டுரைகளில் ஆராயப்பட்டிருக்கின்றனது. இங்கு நாம் யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலுமிருந்து அடியார்கள் இத்தலத்திற்கு நாடி வந்து மனச்சாந்தியும், சித்தசுத்தியும் ஆன்மீக எழுச்சியும் பெறும் இரகசியத்தை ஆராய்வோம்.

தெய்வீகத் தன்மைக்கு பிரத்தியட்ச சாட்சியாகிய சீவன்முக்தர்கள் சிவானுபூதியில் அமிழ்ந்து கங்குல் பகலென்ற திருக்காட்சி அனுபவ நிலையில் விதேக முத்தியடைந்த அவர்களைச் சமயசாத்திர முறைப்படி அடக்கம் செய்கின்றனர். அங்ஙனம் அடக்கம் செய்யப்படும் சமாதிகளில் ஆன்மீக சக்தி நிலவி அவ்விடத்தில் கூடும் உண்மையடியார்களின் உள்ளத்தைத் தீவிரமாய்க் கவர்ந்த அவர்களது ஆன்மீக எழுச்சிக்கு உறுதியாக இருக்குமென்பது எமது சமய மக்களின் நம்பிக்கையாகும். நல்லூரிலும் ஒரு ஞானகுரு சமாதியானார் என்பது கர்ணபரம்பரையாக அறியப்படுகிறது.

இதன் பலனாக இத்திருக்கோவிலில் காலத்திற்குக் காலம் சாதுக்கள் வந்து கூடுவதும், தியானம் செய்து நிஷ்டையிலிருப்பதும், ஆன்மீக சீவியத்திற்கு ஏற்ற; ஸ்தலமென அவர்கள் உணர்ந்து இத்தலத்தினை நடுக்கமாகக் கொண்டு அவர்கள் துறவு பூண்டதும் நாம் அறிந்ததொன்றாகும்.

"சண்பக மரத்தடியிற்
— கிளியே
சாதுக்கள் கூட்டமடி
மண்போட்டால் மண்
விழாதே — கிளியே
மனிதரெல்லாம் கூடிக்
கொண்டார்"

(நற்சிந்தனை)

எங்கள் நாட்டில் ஒரு ஞானச்சுடராய் சுடர்விடும் யோக சுவாமிகளின் ஆசான் செல்லப்பா சுவாமிகள் நல்லூர்க் கந்தன் ஆலயத்தில் திருமுட்டிப்படி மேலே பித்தனைப்போல் வேட்டி பூண்டு வீற்றிருந்ததாக யோக சுவாமிகள் வாயிலாக நாம் அறிகிறோம்.

'ஆனந்த நடனம் ஆடினான்
அல்லும் பகலும் நல்லூர்
வீதியில் செல்லப்பன்'

இதனாலும் சாதுக்கள் கூட்டம் நாள்தோறும் தரிசித்து ஆடிப்பாடி இத்தலத்தைப் புனிதப்படுத்தியமையாலும் நல்லூர்க் கந்தனின் ஆன்மீகக்கோட்டை எங்கள் நாட்டின் ஆன்மீக வளர்ச்சிக்கு ஓர் தேவகூடமாகக் கருதப்படுகிறது. திருவுலாக் காலத்திலும் மற்ற நாட்களிலும் தீவிர பக்தர்கள் இத்தலத்தை நினைந்துருகிப் போற்றிப்புகழ்ந்து திருப்பணிகள் செய்வதும் இதன் பெருமைக்குச் சிறந்த சான்றாகும்.

நாட்டின் பலபாகங்களிலுமிருந்து அடியார்கள் தம்மால் இயன்ற விரதங்கள் பூண்டு காவடி எடுத்துச் சிந்துகள் பாடி நல்லூரானை நடனத்துடன் நாடுவது அழகான காட்சியாகும். அடியார்கள் பக்திக்கும் அங்கப் பிரதிட்டை செய்து வணங்கி வழிபடுவது எல்லோர் உளத்தையும் கவர்கின்றது. தாய்மார்கள் திருவடியளித்து வழிபடுதல் மற்றவர்கள் உளங்களையும் நெகிழச்செய்கின்றது. இவை போன்ற பல உருக்கமான வழிபாடுகளால் நல்லூர்க் கந்தனை என்றும் தரிசித்து வணங்கி அன்பர்கள் அல்லல்களிலிருந்து ஆறுதல் பெற்று ஆனந்தம் அடைகின்றனர். இவை போன்ற முருக பக்தர்களின் பக்திரசம் நிறைந்த திருத்தொண்டுகளினால் இத்திருக்கோவில் மேலும் புனிதம் பெற்று விளங்குகிறது.

அன்பர்களுக்கு அருள்செய்து அபயமளிக்கும் நல்லூர்க் கந்தனின் ஆன்மீகக் கோட்டையின் இயற்கையமைப்பும் சிற்ப சித்திர வடிவங்களும் பலவாகனங்களும் எழில்மிக்க இரதங்களும் முருகனடியார்களை நல்லூரின்கண் ஈர்த்து இவ்வுலகை மறப்பித்து இறைவனின் பேரின்பத்தில் மூழ்கச்செய்கின்றன.

'நல்லூரான் திருவடியை
நான் நினைத்த மாத்திரத்தில்
எல்லாம் மறப்பேனடி
—கிளியே
இரவுபகல் காணேனடி'

(நற்சிந்தனை)

## கடற்படையினர் இரத்த தானம்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணத்திலுள்ள நடமாடும் இரத்தம் சேகரிக்கும் வங்கியினர் காரைநகர் கடற்படை முகாமிற்குச் சென்று அங்குள்ள உத்தியோகத்தரிடமிருந்து இரத்தம் சேகரித்துக் கொண்டனர்; கடற்படைப் பகுதி உத்தியோகத்தர்கள் [illegible] அளித்து இரத்ததானம் செய்ததால் வங்கியினர் தெரிவித்தனர்.

ஆசிரியருக்குக் கடிதம்

## நீர்வேலி கிராமசபை

6-8-65-ல் 'ஈழநாடு' பத்திரிகையில் வெளிவந்த "கிராம சபையினர் வெளிநடப்பு" என்ற செய்தியை பார்வையிட்டேன். இதுபற்றிய உண்மையை அறிய கூற விரும்புகிறேன்.

நீர்வேலி கிராமசபைக்கு ஐபாவத்தையொழுங்கை திருத்துவதற்கென, 1962-ம் ஆண்டு தொடக்கம் கிராமசபை அனுப்பிய வேலைத்திட்டப்படி ஏற்கனவே ரூபா 8000/- ஒதுக்கப்பட்டுள்ளது. தலைவர் மீது நீர்வேலி அங்கத்தவர்கள் வேறு நியாயம் காட்டி நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு முன்னறிவித்தல்கொடுத்தனர்.

ஆகவே உரும்பராய் அங்கத்தவர்களின் ஆதரவுகளைப் பெற அப்பணத்தை உரும்பராயில் ஒரு ஒழுங்கை திருத்துவதற்கு சபையில் பிரேரணை கொண்டுவந்து நிறைவேற்றினர். இவ்விஷயம் சட்டரீதியாக முரணானது என உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு நீர்வேலி அங்கத்தவர்களால் 5-7-65ல் அறிவிக்கப்பட்டது' அவர் கிராமசபைத் தலைவருக்கு மாற்றுத் தீர்மானம் கொண்டுவந்தமைக்கு காரணம் காட்டுமாறு கடிதம் எழுதினர்.

எனவே தலைவர் 15-7-65ல் அச்செயல் முரணானதுதான் எனவும் அதை திருத்தி அமைக்கச் சம்மதிப்பதாகவும் உதவி ஆணையாளருக்குக் கடிதம் எழுதினர்.

புதிதாக தெரிவுசெய்யப்பட்ட தலைவர் ஆணையாளரால் 20-7-65ல் எழுதிய கடித விஷயத்தை அமுல்நடத்தினரேதவிர உரும்பராய்க்கு ஒதுக்கப்பட்ட பணத்தை நீர்வேலிக்கு மாற்றியமைத்ததுஎன்று கூறுவது சரியல்ல.

சி. இராசசிங்கம்
கி. ச. அங்கத்தவர்
நீர்வேலி தெற்கு,
நீர்வேலி.

## 37 வருட சேவைக்குப் பின் ஓய்வு

மன்னார், வியாழன்

மன்னார் சென் சேவியர் கல்லூரியில் கடந்த 37 வருடகாலமாக ஆசிரியராகப் பணியாற்றி ஓய்வுபெறும் திரு சி. எல். செபஸ்தியான் கல்லூரி மாணவர்களாலும், பழைய மாணவர்களாலும், சென் சேவியர் கல்லூரி மண்டபத்தில் பிரியாவிடை விழா அளிக்கப்பட்டது. கல்லூரி அதிபர் சங் பிறதர் கில்லறி யோசவ், திரு. செபஸ்தியானின் உருவப் படத்தை திரைநீக்கம் செய்து வைத்தார்.

மதிய விருந்தில் திரு செபஸ்தியானின் பழையமாணவரும் பட்டினசபைத் தலைவருமான ஜனாப் எஸ் எம். அப்துல் நகீம், மன்னார் அரசாங்க அதிபர் திரு டி நேசையா ஆகியோரும் கலந்துகொண்டனர். மாலையில் நடந்த பொதுவரவேற்பில் அநேக ஆசிரியர்களும் பிரமுகர்களும் சொற்பொழிவாற்றினர்.

## நடைபஜனை

யாழ்ப்பாணம், வெள்ளி

இம்மாதம் 25 ம் திகதி நடைபெறும் நல்லூர்த் தேர்த் திருவிழாவில் கலந்துகொள்வதற்காக ஏழாலை இலந்தைகட்டி [illegible] கோவிலிலிருந்து 24ம் திகதி விடியற்காலை 3-30 மணிக்கு நடை பஜனைக் கோஷ்டியினர் புறப்படவிருக்கின்றனர்.

## ஐயாறன்

[illegible]

மலாயாவிலிருந்து நமக்கு ஒரு விசேஷ அழைப்பு கிடைத்திருக்கிறது! வருகிற ஏப்ரல் மாதத்திலே அங்கு தமிழ் மகாநாடும், விழாவும் நடக்கிறதாம். அதற்கு உலகிலே பல நாடுகளிலிருந்தும் பல தமிழ் அன்பர்கள் வருவதாயும், ஈழத்திலிருந்து குறைந்தது 700 அன்பர்களாவது வரவேண்டுமென்று நமது தனிநாயக அடிகளார், சென்ற வாரம் கொழும்பிலே நாவலர் ஹாலில் நடந்த ஒரு கூட்டத்துக்குத் தலைமை வகித்து நம்மை அன்புடன் அழைத்தார். இலங்கையை விட்டுச் சென்ற பல வருடங்களாக வெளியே செல்லமுடியாமல் சிறைப் பட்டுள்ளவர்களுக்கு இது ஒரு நல்ல "சான்ஸ்" அல்லவா?

• • •

அந்த மகாநாட்டை யார் கூட்டுகிறார்கள்? அங்கு செல்ல இலங்கை அரசாங்கம் அனுமதிக்குமா? வசதியற்றவர்களுக்கு இலவச பிரயாணச் சீட்டு கிடைக்குமா? இம் மகாநாடு எவ்வளவு காலம் நடக்கும்? மலாயாவில் எவ்வளவு காலம் இருக்கலாம்? இதுபோன்ற பல கேள்விகளுக்கும் அடிகளார் விளக்கம் தந்தார்கள்.

சென்றவருடம் ஜனவரி மாதத்தில் புதுடில்லியிலே கிழக்கத்திய அறிஞர்கள் காங்கிரஸ் ஒன்று நடந்தது. அங்கு தமிழ் ஆராய்ச்சியாளர் சங்கமொன்றை அமைத்தனர். கூட்டத்தில் இந்தியா, இலங்கை, மலாயா, பிரான்ஸ், பிரிட்டன், சென்னை, செக்கோஸ்லேவாக்கியா, பென்சில்வேனியா, சிகாகோ முதலிய இடங்களிலிருந்தும் பல தமிழ் ஆராச்சியாளர் பங்குபற்றினர். இலங்கையிலிருந்து பேராசிரியர் கே. கணபதிப்பிள்ளை, பண்டிதர் க. பொ. ரத்தினம் இவர்கள் கலந்துகொண்டனர், தமிழ் ஆராய்ச்சித் துறையில் ஈடுபட்டுள்ள சில ஐரோப்பிய, அமெரிக்க அறிஞர்களும் இக் கூட்டத்துக்கு வந்திருந்தனராம்.

அச்சமயம் தான் சர்வதேச தமிழ் ஆராய்ச்சி சங்கத்தை அமைத்தார்கள். இச் சங்கத்தின் ஆதரவில்தான் மலாயாவிலே கோலாலம்பூரில் மலாயா சர்வகலாசாலையிலே, கருத்தரங்கும் மகாநாடும் நடைபெறுகின்றதாம்.

அங்கு நமது தனிநாயக அடிகளார், இந்திய கலைஞானம் பகுதியின் பேராசிரியராக சென்ற சில ஆண்டுகளாகத் தொண்டாற்றுவது தெரிந்தது. அவரும் செக்கோஸ்லேவாக்கியாவைச் சேர்ந்த டாக்டர் கமில் ஸெவிபில் அவர்களும், தமிழ் ஆராய்ச்சி சங்கத்தின் காரியதரிசிகளாவர்.

கோலாலம்பூரில் இம் மகாநாட்டை நடத்த சர்தேச தமிழ் ஆராய்ச்சிசங்கம், மலாயா சர்வகலாசாலை, மலாயா தேசிய கல்வி (இந்திய பப்ளிக்கூட்) அபிவிருத்திசபை இவைகளே ஏற்பாடு செய்கின்றன. மலாயா அரசாங்கத்தின் இரு தமிழ் அமைச்சர்களான திருஞானசம்பந்தன், மாணிக்கவாசகம் இவர்களும். செனட்டர் உபயதுல்லா, பேராசிரியர் எனியேலர், கே. ராமநாதன், எஸ். பழனிவேலு, முருகு சுப்பிரமணியம் முதலியவர்களடங்கிய ஒரு விசேஷ கமிட்டியும் பல உப கமிட்டிகளும் அமைக்கப்பட்டுள்ளனவாம்.

மலாயாவிலுள்ள பள்ளி ஆசிரியர்கள் பலர் மாதம் ஒரு வெள்ளிவீதம் பல மாதங்களாகக் கொடுத்து, இதற்காக கல்லதொகை சேர்த்துள்ளதாயும், பல ஸ்தாபனங்களும் பண உதவிசெய்ய முன்வந்துள்ளதாயும், தமிழ் ஆராய்ச்சி கட்டுரைகளை மகாநாட்டுக்கு அனுப்பிவைத்தால் அதில் சிறந்தவற்றைத் தெரிவு

(6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 259 ஊடுருவல்காரர்கள் கொல்லப்பட்டனர்

## சரணுகதி அடையாவிட்டால் அனைவரும் கொல்லப்படுவர் என சாதிக் எச்சரிக்கை

### பாகிஸ்தான் நடவடிக்கையை நிறுத்த கோருமாறு யுதாண்டுக்கு இந்தியா விண்ணப்பம்

ஸ்ரீநகர், ஆக. 12

**ஸ்ரீநகரின் உள்ளேயும், வெளியேயும், பொதுவாக காஷ்மீர் பள்ளத்தாக்கிலும் நிலைமை இப்போது அமைதியாக இருக்கிறதென்றும் நிலைமை கட்டுப்பாட்டிற்குள் இருக்கிறதென்றும் அறிவிக்கப்படுகிறது. ஆனல் ஸ்ரீநகரின் சில பகுதிகளில் ஊடுருவாளர்கள் புகமுடியாதபடிக்கு ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.**

**10 பேர் பலி**

சாம் பகுதியில் நேற்று ஏற்பட்ட சண்டையில் 10 பாகிஸ்தானியர் கொல்லப்பட்டு, 15 பேர் காயமடைந்தனர் என அறிவிக்கப்படுகிறது. இதோடு சேர்த்து 94 பாகிஸ்தானியர் ஆும் மற்றும் 165 பேரும் ஆக மொத்தம் 259 பேர் கொல்லப்பட்டிருப்பதாக மேலும் அறிவிக்கப்படுகிறது.

**12 பேர் பிடிபட்டனர்**

நேற்று 2 பாகிஸ்தானிய ராணுவ அதிகாரிகள் உட்பட 12 பேர் சிறைபிடிக்கப்பட்டு டில்லி கொண்டுவரப்பட்டார்கள்.

இதற்கிடையில் ஊடுருவாளர்களைப் பிடிக்கும் முயற்சி தீவிரமாக மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

**டில்லி மறுப்பு**

12 ரஸ்தாக்களை பாகிஸ்தானியர் துண்டித்துவிட்டார்கள் என்ற கராச்சிச் செய்தியை டில்லி மறுத்திருக்கிறது.

**யு தாண்டுக்கு கோரிக்கை**

இதற்கிடையில் பாகிஸ்தான் தற்போதைய நடவடிக்கையை நிறுத்துமாறு கேட்கும்படி இந்தியா நேற்று ஐ.நா தலைமைக் காரியதரிசிக்கு விண்ணப்பித்திருக்கிறது. ஊடுருவல்காரர்கள் பாகிஸ்தான் ராணுவத்தால் கட்டுப்படுத்தப்படுவதாக இந்தியா விண்ணப்பத்தில் கூறப்பட்டிருக்கிறது.

**சரணுகதி அடைக**

காஷ்மீர் முதல்வர் திரு. சாதிக் நேற்று விடுத்த அறிக்கையில் பாகிஸ்தானின் ஊடுருவல்களுக்கு இந்திய ராணுவம் பலத்த அடி கொடுக்குமென்றும், எதிரிகள் சரணுகதியடைய வேண்டுமென்றும், இன்றேல் ஒருவர் கூட திரும்பிச்செல்ல இடமளிக்கப்படமாட்டாதென்றும் கூறியிருக்கிறர். உயிருடன் இருக்கவேண்டுமானல் அப்படிச் செய்ய வேண்டும் என்றும், அல்லாவிட்டால் ஒருவர் பாக்கியின்றி கொல்லப்படுவார்களென்றும் அவர் மேலும் கூறியிருக்கிறர்.

**கரண்சிங்**

நேற்று காஷ்மீர் கவர்னர் கரண்சிங் ஜனதிபதி ராதாகிருஷ்ணனைச் சந்தித்து நிலைமை பற்றிப் பேசினர்.

நியூயோர்க்கில் ஐ.நா இந்தியப் பிரதிநிதி யுதாண்டைச் சந்தித்து பாகிஸ்தான் ஊடுருவலை நசுக்க இந்தியா உறுதியுடன் இருக்கிறது என்று தெரிவித்துக்கொண்டார்.

சர்வதேச கட்டமைப் பொறுப்பிலிருந்து பாகிஸ்தான் விலகிச் செல்லமுடியாதென்றும், அதன் செயல் கண்டனத்துக்குரியதென்றும் மேலும் அவர் தெரிவித்தார்.

இதற்கிடையில் ஜம்மு-காஷ்மீரின் பாதுகாப்பு வலுப்படுத்தப்பட்டிருப்பதாயும் அறிவிக்கப்படுகிறது.

**அப்பாலிருந்து சுடுகிறர்கள்**

ஊடுருவல்காரர்களைத் தடுக்கும் முயற்சியிலீடுபட்டிருக்கும் இந்தியத் துருப்புக்கள் மீது, எல்லைக்கப்பாலிருந்து பாகிஸ்தானியர் சுட்டு வருகிறர்களென்றும், பாகிஸ்தான் பகுதியில் துருப்புக்களின் நடமாட்டம் தென்படுகிறதென்றும் அறிவிக்கப்படுகிறது.

## ஸ்ரீநகரில் நிலைமை அபாயம் என்கிறது பாகிஸ்தான்

### நேற்றைய சண்டையில் 40 இந்தியர் கொல்லப்பட்டனர்?

கராச்சி, ஆக. 12

**காஷ்மீரின் பல பகுதிகளில் கடும் சண்டை நடைபெற்று வருவதாய், "காஷ்மீரின் குரல்" என்ற வானெலி அறிவித்திருக்கிறது என பாகிஸ்தான் ரேடியோ செய்திகள் கூறுகின்றன.**

சண்டை பலவிடங்களில் பரவி வருவதாகவும், இந்தியத் துருப்புக்களுக்கு பலத்த சேதம் ஏற்படுத்தப்பட்டிருப்பதாயும், எல்லா விடங்களிலும் தங்களுக்கு வெற்றி கிடைத்து வருவதாயும் அது மேலும் கூறியது.

ஸ்ரீநகருக்கு வடபகுதியில் பொலிஸ் நிலயங்கள் தாக்கப்பட்டன என்றும், பராமுல்லாவிலுள்ள இந்திய ராணுவத் தலைமைக் காரியாலயம் திடீரெனத் தாக்கப்பட்டதில் 40 பேர் கொல்லப்பட்டனர் என்றும், 80 பேர் காயப்படுத்தப்பட்டனர் என்றும் அது கூறியது.

மேற்று 6 பாலங்கள் அழிக்கப்பட்டதாயும், லொறிகளும், இதர உபகரணங்களும் அழிக்கப்பட்டதாயும் கூறப்பட்டது.

ஸ்ரீநகரில் நிலைமை அபாயகரமாய் இருக்கிறது என பாகிஸ்தான் ரேடியோ மேலும் தெரிவித்தது.

காஷ்மீர் புரட்சிசபை அங்கத்தினர்களின் பெயர் விரைவில் அறிவிக்கப்படும் என்றும், அது இந்தியாவைத் திகைப்பில் ஆழ்த்துமென்றும் தொடர்ந்து கூறப்பட்டது.

## 'உளவாளிகள்' சுடப்பட்டனர்

ஹவானு, ஆக. 12

அமெரிக்க உளவாளிகள் என்ற காரணத்திற்காக கியூபாவில் மூவருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டு அவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டார்கள்.

## நீக்ரோவுக்கு உயர் பதவி

வாஷிங்டன், ஆக. 12

அமெரிக்காவில் நீக்ரோ ஒருவர் சொலிஸிட்டர் ஜெனரலாக நியமிக்கப்பட்டிருக்கிறர். நியூயோர்க்கில் நீதிபதியாக இருந்த இவர் உயர் பதவிக்கு நியமிக்கப்பட்ட இரண்டாவது நீக்ரோவராகும்.

## ரொடீஷியாபற்றி பொட்டம்லி

லண்டன், ஆக. 12

தென்ரொடீஷியாவில் பிரிட்டிஷ் துருப்புகள் செயலில் இறங்கினல் அதன் விளைவுகள் மோசமாக இருக்குமென காமன்வெல்த் உறவு மந்திரி திரு. பொட்டம்லி கூறினர். பிறருக்கு ன் பிரதமர் ஸ்மித் ஒத்துழைக்காதவரை பிரச்னை தீராது என்றும் அவர் குறிப்பிட்டார்.

## சிங்கப்பூர்

சிங்கப்பூர், ஆக. 12

சிங்கப்பூரிலிருந்து பிரிட்டிஷ் ராணுவத்தளம் விலகிய மறுதினமே, இந்தோனேஷியத் துருப்புகள் அங்கு இருக்கும் என பிரதமர் திரு. லீகுவான்யூ கூறினர் பிரிட்டிஷ் ராணுவத்தளம் விலகுவது சிங்கப்பூருக்கு ஆபத்து என்றும் அவர் கூறினர்.

சுதந்திர சிங்கப்பூருக்கு அமெரிக்கா அங்கீகாரம் வழங்கியிருக்கிறது.

## 1000 கோடி அதிகரிப்பு இல்லை

புதுடில்லி, ஆக. 12

4-ம் ஐந்தாண்டுத் திட்டம் ரூ. 21 500 கோடியாக இருக்க வேண்டும் என்றும், மேலும் 1000 கோடி ரூபாய் அதிகரிப்பு இப்போது இல்லை என்றும் திட்டக் கமிஷன் உபதலைவர் திரு. அசோக்மேத்தா கூறினர்.

## பிரெஞ்சு மந்திரிக்கு கௌரவம்

காசி, ஆக. 12

பிரெஞ்சு கலாச்சார மந்திரி திரு. மல்ரோவுக்கு வாரணசியிலுள்ள சமஸ்கிருத பல்கலைக்கழகம் நடத்திய ஒரு விசேஷ பட்டமளிப்பு விழாவில் "இலக்கிய கலாநிதி" என்ற பட்டமளித்துக் கௌரவித்தது.

## பபாந்திரியோனுக்கு அழைப்பு

ஏதன்ஸ், ஆக. 12

4 வாரங்களுக்கு முன் பதவி நீக்கம் செய்யப்பட்ட கிரேக்க பிரதமர் பபாந்திரியோஸ் மன்னரைச் சந்திக்குமாறு மீண்டும் அழைக்கப்பட்டிருக்கிறர். கிரீஸின் [illegible] யைத் தணிப்பது பற்றி அவர் மன்னருடன் பேச்சு நடத்தினர்.

## ஸ்ரீநகரில் 6 நகரங்களில் பலாத்கார ஆர்ப்பாட்டங்கள்

### பல இடங்களில் பொலிஸ் சூடு

புதுடில்லி, ஆக. 12

பீகாரில் அடைடசின் நகரங்களில் பலாத்கார ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றிருக்கின்றன பல நகரங்களில் ரயில்வே நிலயங்களையும் ரயில் பெட்டிகளையும் தீவைக்க குண்டர்கள் முயற்சி செய்ததாய் அறிவிக்கப்படுகிறது.

பல நகரங்களில் பொலிசார் தடியடிப் பிரயோகமும், துப்பாக்கிப் பிரயோகமும் செய்தனர். பண்டகசாலை ஒன்றை குண்டர்கள் எரித்தனர். பலர் கைதுசெய்யப்பட்டனர்.

நாசவேலையில் ஈடுபடுபவர்கள் கண்டவுடன் சுடப்படுவார்கள் எனஎச்சரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது. ஹைதராபாத்தில் சில இடங்களில் மாணவர்கள் இரண்டாம் நாளாக நேற்று கலவரத்தில் ஈடுபட்டனர். பொலிசார் தடியடிப்பிரயோகம் செய்து கூட்டத்தைக் கலைக்க வேண்டியதாயிற்று அநேக கல்லூரிகள் இதன் விளைவாக மூடப்பட்டிருந்தன.

## ஹானேயிலிருந்து வயோதிபர் குழந்தைகள் வெளியேற்றம்

### அமெரிக்க குண்டு வீச்சு சமீபித்துவிட்டதாம்

ஹானேய், ஆக. 12

**ஹானேய்க்கருகே அமெரிக்க விமானங்கள் குண்டு வீச்சை ஆரம்பித்துவிட்டதால், அங்கிருந்து வயோதிபர்கள், குழந்தைகள் ஆகியோர் வெளியேற்றப்படுகிறர்கள் என்றும் அறிவிக்கப்படுகிறது.**

எனினும் ஹானேய் மக்களிடையே பீதி எதுவும் இல்லை என்றும், ஒவ்வொரு வீட்டிலும் பாதுகாப்பு அரண் அமைக்கப் பட்டிருப்பதாயும் மேலும் அறிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில் கொரில்லாக்களால் முற்றுகையிடப்பட்டிருக்கும் டியூக்கோ காவல் நிலையை தென்வியட்னுமிய உதவிப்படைகள் அணுகிவிட்டதென்றும், கடந்த 8 தினங்களாக கண்ணிவெடிகள், மற்றும் பல இடையூறுகள் சண்டைகள் ஆகியவற்றைச் சமாளித்து அது அமெரிக்க விமானப்படை உதவியுடன் காவல் நிலையை நெருங்கிக் கொண்டிருக்கிறதென்றும் அறிவிக்கப்படுகிறது.

வடவியட்னும் மீது அமெரிக்கவிமானத்தாக்குதல்நேற்று தொடர்ந்து நடைபெற்றது.

இம் மாதமுதல் வாரத்தில் தென்வியட்னும் அரசாங்கத் துருப்புக்களுக்கு பலத்தசேதம் ஏற்படுத்தப் பட்டிருக்கிறது.

சைகோன் அரசாங்கம் கேட்டுக் கொண்டாலும்கூட அமெரிக்கத் துருப்புக்கள் தென்வியட்னுமிலேயே நீடிக்கும் என சைகோனிலுள்ள யு. எஸ். தூதர் திரு கெபொட்லாட்ஜ கூறியதாக வெளியான செய்தியை வெள்ளைமாளிகை மறுத்திருக்கிறது.

## ரஷ்யாவுக்கு 50 லட்சம் டன் கோதுமை

ஒட்டாவா, ஆக. 12

ரஷ்யா 60 லட்சம் டன் கோதுமையை கனடாவிலிருந்து வாங்க ஆர்டர் கொடுத்திருக்கிறது. இதன் விலை 55 கோடி டாலராகும். 12 மாதங்களில் இக்கோதுமை அனுப்பப்படும்.

## சோவியத்படத்துக்கு முதல் பரிசு

வெனிஸ், ஆக. 12

வெனிஸில் நடைபெற்ற சிறுவர் திரைப்பட விழாவில் 'மொஜேஸ்கா' என்ற சோவியத் படத்துக்கு முதல் பரிசு கிடைத்துள்ளது. பதினெரு நாடுகள் பங்கு பற்றிய இவ் விழாவில் 89 படங்கள் போட்டியில் இடம் பெற்றன.

## எதிரிக்கு 6 மாத கடுங்காவல்

சாவகச்சேரி, வியா

புத்தூரைச் சேர்ந்த ஆறுமுகம் புவனேஸ்வரி என்பவருக்குச் சொந்தமான 725 ரூபா பெறுமதியான தங்க மணிகளைத் தனது பாவிப்பில் வைத்திருந்ததாக மந்துவிலைச் சேர்ந்த கணபதி செல்லன் என்ற வயோதிபர் மீது குற்றம்சாட்டி சாவகச்சேரிப் பொலிசாரால் தொடரப்பட்ட வழக்கு சாவகச்சேரி மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

விசாரணையின் பின்னர் நீதிபதி திரு. பி. ஜெபேர்ட்சில்வா எதிரியைக் குற்றவாளியாகக் கண்டு ஆறு மாதக் கடுங் காவல்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார்.

## 'தேசிய அரசாங்கம் வலிமைமிக்கது'

### தேசிய சேவை மந்திரி கூறுகிறர்

காலி, புதன்

'தேசிய அரசாங்கம் மிக்க வலிமையுள்ளது இதை யாரும் கவிழ்த்துவிட முடியாது' என தேசியமய சேவைகள் விளையாட்டுத்துறை மந்திரி திரு. வி. ஏ. சுகததாச காலியில் இ. போ. ச. தொழிலாளர் மத்தியில் பேசுகையில் கூறினர்.

திரு. சுகததாச மேலும் பேசுகையில் கூறியதாவது:

இ. போ. ச தொழிலாளர்களுடைய சில கோரிக்கைகளை உடனே நிறைவேற்றிவிட முடியாத நிலையில் அரசாங்கம் இருக்கிறது ஊழியர்கள் இது விஷயத்தில் சிறிது பொறுமையோடு இருக்குமாறு நான் கேட்டுக்கொள்கிறேன். தொழிலாளர்கள் தமது கடமையையும் பொறுப்பையும் நன்குணர்ந்து நடந்துகொள்ள வேண்டும்.

உள்விவகார அமைச்சர் டாக்டர் டபிள்யு தஹநாயக்கா பேசுகையில், திரு. சுகததாசா பிரச்னைகளைத் தீர்க்கும் ஆற்றலுள்ளவர் என்றும் அதனால் தான் பிரதமர் அவருக்கு அவர் வகுக்கும் மந்திரிப்பதவியை வழங்கினரென்றும் கூறினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழிப்பிரச்னைக்கு

# நிரந்தர தீர்வு காணுதவரை சுதந்திர நாடாக விளங்கமுடியாது’

## ஹர்த்தால் தினக்கூட்டத்தில் அனில் முனசிங்கா

யாழ்ப்பாணம், வியாழன்
இந்நாட்டில் மொழிப்பிரச்னை நிரந்தரமாகத் தீர்க்கப்படாத வரை இந்நாடு ஒரு சுதந்திர நாடாக விளங்க முடியாது. முதலாளித்துவ அரசாங்கத்தினால் மொழி பிரச்னைக்கு ஒரு காலமும் நிரந்தரமான தீர்வு காண முடியாது. சோஷலிச அரசாங்கத்தின் மூலமே நிரந்தரமான தீர்வு காண முடியும்.

யாழ்ப்பாணம் கோட்டை மைதானத்தில் நேற்று மாலை நடைபெற்ற ஹர்த்தால் நினைவு தினக்கூட்டத்தில், முன்னாள் போக்குவரத்து மந்திரியும், அத்தனகலை எம். பி.யுமான திரு. அனில் முனசிங்கா பேசும் போது மேற்கண்டவாறு கூறினார்.

திரு. ஐ. ஆர். அரியரத்தினம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. அனில் முனசிங்கா மேலும் கூறியதாவது:

மொழிப்பிரச்னை இனப்பிரச்னைக்கு நிரந்தரமான தீர்வு காணப்பட்டால்தான் இந்நாடு முன்னேற்றப்பாதையில் செல்ல முடியும். இடதுசாரிகளைக்கொண்ட சோஷலிச அரசாங்கத்தினால்தான் நிரந்தரமானத் தீர்வு காண முடியும். இந்நாட்டிலுள்ள பெரும்பான்மை மக்கள் ஏற்றுக் கொள்ளாத ஒரு தற்காலிகத் தீர்வை நிரந்தர தீர்வு என ஏற்றுக்கொள்ள முடியுமா? இதனால் எவ்வித பலனும் ஏற்படப்போவதில்லை.

சமசமாஜ, கம்யூனிஸ்ட் சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவர்கள் வகுப்புவாதத்தை மீண்டும் தலைதூக்கப் பிரசாரம் செய்து வருகிறார்கள் என்று தேசிய அரசாங்கம் அமைக்கப்பட்ட பின் சிலர் கூறி வருகிறார்கள். இப்படியான சூழ்நிலையில்தான் யாழ்ப்பாணத்துக்கு சேவை செய்வதை இட்டு மகிழ்ச்சியடைகிறேன். சமசமாஜ, கம்யூனிஸ்ட் கட்சிதான் இந்நாட்டிலுள்ள எல்லா சமூகத்தவர்களையும் கொண்ட கட்சிகள் எனக் கூறலாம். தென்பகுதியில் மட்டுமின்றி வடபகுதியிலும் எங்களுக்கு ஆதரவாளர்கள் உண்டு. அப்படிப்பட்ட நாங்கள் ஒருபோதும் வகுப்புவாதத்தை ஆதரிக்க முயற்சி எடுக்கமாட்டோம்.

தேசிய அரசாங்கத்திலிருப்பவர்கள்தான் முழுக்க முழுக்க வகுப்புவாதிகள். பதவிக்காக சந்தர்ப்பத்திற்கேற்றவாறு நடிக்கிறார்கள். தமிழ் மக்களின் தோலில் செருப்பு தைத்துப் போட்டால்தான் மகிழ்ச்சியடைவேன் என்று கூறியவரும் 1958-ம் ஆண்டு வகுப்பு கலவரத்தில் முக்கிய பங்கெடுத்து தலைமை தாங்கியவர்களும்தான் தேசிய அரசாங்கத்தில் இருக்கிறார்கள்.

### வகுப்புவாதத்தை ஆதரிக்கமாட்டோம்

நாங்கள் ஒருபோதும் வகுப்புவாதத்திற்கு ஆதரவளித்தது கிடையாது. 58-ம் ஆண்டு வகுப்பு கலவரத்தில் பதுளையில் நாங்கள்தான் அங்குள்ள தமிழ்மக்களை காப்பாற்றினோம். எனது தொகுதியான அகலவத்தையில் ஒரு தமிழ் மகனாவது தாக்கப்படவில்லை. என்னுடன் போட்டியிட்டு தோல்வியடைந்தவர் 1958-ம் ஆண்டு ரிமாண்டில் இருந்தவர். கடந்தகால நிகழ்ச்சிகளை ஆராய்ந்து பாருங்கள். நாங்களா அல்லது தேசிய அரசாங்கத்திலுள்ளவர்களா வகுப்புவாதிகள்?

நான் இங்கு வந்தபோது என்னிடம் சிலர் வடை, தோசை கதை பற்றிக் கேட்டார்கள். தேசிய அரசாங்கத்தில் வெறுப்படைந்த சிங்கள பொதுமக்கள் சில சந்தர்ப்பங்களில் அப்படி கூறியுள்ளார்கள். இதற்கு யார் காரணம்? வகுப்புவாதத்தை முதன்முதலில் புகுத்தியவர்கள் யார்? சிங்கள மக்கள் மத்தியில் இனப்பிரச்னையை எழுப்பியவர்கள் யார்? 80 வருட காலமாக சிங்கள - தமிழ் மக்களுக்காக போராடி வந்தது நாங்களா? ஆட்சியைக் கைப்பற்ற சுருக்கமான வழியைக் கையாண்ட அவர்களா? சிங்கள மக்களுக்கு அவர்கள் கபித்து கொடுத்த பட்டம்தான் இப்போது வேலை செய்கிறது.

60-ம் ஆண்டு தேர்தலின் போது பெரிய இலங்கைப் படத்தைக் காட்டி வகுப்புவாதத்தை யு என் பி கட்சியினர் வளர்த்தனர். முதல் அடி என்ற புத்தகத்தை வெளியிட்டு இனப்பிரச்னையை கிளப்பினார்கள். இன்று ஆட்சியில் ஏறியதும், தேசியம், ஒற்றுமை என்றெல்லாம் பேசி வருகிறார்கள்.

இன்று நாங்கள் ஹர்த்தால் ஞாபகார்த்ததினமாக இக்கூட்டத்தை நடத்துகிறோம். 58-ம் ஆண்டு 100 தொகுதிகளில் 71 தொகுதிகள் யு என் பி யிடமிருந்தது அப்படியிருந்தும், 7 மாத காலத்தில் பிரதமர் டட்லியை ஹர்த்தால் மூலம் விரட்டியுள்ளோம். 8 வருட காலத்தில் யூ என் பி யை மக்கள் முற்றாக வெறுத்தார்கள். 1956-ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் எட்டு தொகுதிகள் மட்டும்தான் யூ. என். பிக்கு கிடைத்தது.

வே வலையில் அண்மையில் நான் பேசும்போது, மொழி பிரச்னை நிரந்தரமாக தீரும் வரை இந்நாடு சுதந்திர நாடாக திகழ முடியாதெனக் கூறினேன். முதலாளித்துவப் பத்திரிகைகள் எல்லாம் என் பேச்சை இருட்டடிப்பு செய்து விட்டது. பத்திரிகைகளின் ஆதரவின் மூலமும் முதலாளிகளின் ஒத்துழைப்பு மூலமே தேசிய அரசாங்கம் நடைபெறுகிறது.

ஐக்கிய தேசிய கட்சிக்காக தேர்தல்பிரசாரம் செய்த தன் மூத்த அமரவன்சதேமரா, நான் போக்குவரத்து மந்திரியாக இருந்தபோது என்

(5-ம் பக்கம் பார்க்க)


இப்பொழுது வெற்றிமுரசு கொட்டுகிறது!

கெப்பிட்டல் (கொழும்பு) | பிளாசா (வெள்ளவத்தை) | நவா (கொமபனித்தெரு)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) | விஜயா (மட்டக்களப்பு) | மொடேர்ன் (பதுளை)

விஜிதா (ஹட்டன்) | திவோலி (நுவரேலியா) | கல்யாணி (காவலப்பிட்டி)

லக்ஷ்மி (இரத்தினபுரி) | அயன் (மன்னார்)



எம்.ஜி.ஆர்.-சரோஜாதேவி
மற்றும்பலர் நடிக்கும்
நீதிக்குப்பின் பாசம்


# தான் பெற்ற பிள்ளையை கொலை செய்தாராம்

## கைதடியில் சம்பவம்

சாவகச்சேரி, வியாழன்
கைதடியில் ஒரு இளம்பெண் தனது பிரசவத்தின் பின்னர் தான் பெற்ற குழந்தையின் முகத்தை நெரித்துக் கொலை செய்து புதைத்துள்ளதாகச் சாவகச்சேரிப் பொலிசாருக்குக் கிடைத்த தகவலைத் தொடர்ந்து சாவகச்சேரிப் பொலிஸ் சப் இன்ஸ்பெக்டர் திரு. ஆ. தேவசகாயம் ஸ்தலத்திற்குச் சென்று விசாரணை நடாத்தினார். சின்னப்பிள்ளை ஆறுமுகம் என்பவருடைய வீட்டு மலசல கூடத்திற்கருகாமையில் புதைக்கப்பட்டிருந்த குழந்தையின் சடலம் வெளியே எடுக்கப்பட்டதுடன் குழந்தையின் தாயார் என்று கருதப்படுபவரான விவாகமாகாத சின்னப்பிள்ளையின் மகள் செல்லம்மாவும் இன்ஸ்பெக்டரால் கைது செய்யப்பட்டார்.

சாவகச்சேரி மஜிஸ்திரேட் திரு. பி. ஜெயசிங்கம் ஸ்தலத்திற்குச் சென்று விசாரணை நடாத்தினார். நீதிபதியின் விசாரணையின் போது அந்த இளம் பெண்ணின் தாயாரான ஆறுமுகத்தின் மைத்துனி சின்னப்பிள்ளை சாட்சியமளித்தார்.

அவர் கூறியதாவது:-

### விவாகம் ஆகவில்லை

“சின்னம்மா என்னுடைய மகள். அவருக்கு இன்னும் விவாகமாகவில்லை. நாங்கள் இருவரும் ஒரே வீட்டில்தான் வசிக்கிறோம். கதிர்காமநாதன் என்ற ஒரு இளைஞன் அடிக்கடி எங்கள் வீட்டுக்கு வருவார். இம்மாதம் 6-ம் திகதி எனது மகள் தனக்கு வயிற்றுக்குத்து என்று சொன்னாள். அன்று பிற்பகல் 2-30 மணிபோல் தனக்கு வயிற்றுக்குத்தும் கடுமையென்றும் குடிக்கக் கோப்பி தரும்படியும் கேட்டார். எனது மகள் அப்போது மிகவும் களைப்படைந்து காணப்பட்டார். நான் கோப்பி தயாரித்துக்கொண்டுவந்தபொழுது சின்னம்மா தரையில் விழுந்து கிடந்ததையும், குழந்தை ஒன்று பக்கத்தில் இருந்ததையும் கண்டேன். குழந்தை ஆடாமலும் அசையாமலும் கிடந்தது. இதனால் நான் ஆத்திரமடைந்து வெளியே போய்விட்டேன். நான் குழந்தையைத் தூக்கவுமில்லை, புதைக்கவுமில்லை. மகளே குழந்தையைத் தூக்கிக்கொண்டு போனவளை, புதைத்ததையோ நான் காணவில்லை. என் இளைய மகள் குறைந்த ...

... கதிர்காமநாதன் குறைந்த சாதியைச் சேர்ந்தவர் என்பதால் மகள் குழந்தைக்குப் பொறுப்பாளி கதிர்காமநாதன் என்று கூறியபடியினாலேயே நான் குழந்தை குறித்து கவனம் எடுக்கவில்லை. புதைத்த இடத்தை குழந்தை ... என்று எனக்குத் தெரியாது.”

நீதிபதி சாட்சியத்தைப் பதிவு செய்த பின்னர் குழந்தையின் சடலத்தைப் பிரேத பரிசோதனை செய்யுமாறு டாக்டருக்கு உத்தரவிட்டார்.

மாவட்ட வைத்திய அதிகாரி திரு ஜி ஈஸ்வரையா பிரேத பரிசோதனையின் பின்னர் குழந்தை பிறந்த பின் இறந்திருப்பதாக அறிக்கை சமர்ப்பித்தார். மேற்பரிசோதனைக்காக குழந்தையின் குடல், நுரையீரல் பகுதிகள் அனுப்பப்படவேண்டும் என்றும் கூறினார்.


நீதிபதி அந்த சிசுவின் குழந்தையின் தாயார் என்று கருதப்படுபவரான சின்னம்மாவை ஆயிரம் ரூபா பிணையில் செல்ல அனுமதியளித்தார்.

---

## 10 கோடி டலர் கடன்

வாஷிங்டன், ஆக. 12
உலக வங்கியின் சர்வதேச அபிவிருத்தி சங்கம் இந்தியாவுக்கு 10 கோடி டாலர் வட்டியில்லாக் கடன் வழங்கவிருக்கிறது.


# வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் பஞ்சரத திருப்பணி நிதி



ஒவ்வோர் சைவ நன்மக்களாலும் வளர்ந்து புதிய ரதங்களை விரைவில் உருவாக்க அடியார்கள் நன்கொடை எதிர்பார்க்கப்படுகிறது.

பணம் அனுப்பும் விலாசம்:-
தனாதிகாரி, திருப்பணிச்சபை,
தேவஸ்தான காரியாலயம்,
வண்ணை. வைத்தீஸ்வரன் தேவஸ்தானம்,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

REGAL - JAFFNA
NOW SHOWING
Richard Harrison
in
THE PITILESS 3
(Totalscope color)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளம்பரம்

### அறிவித்தல்

K S ஐயாத்துரை ஆகிய நான் யாழ்ப்பாணம் N. S. தாசன் & கோ ஸ்தாபனத்தாரின் சேவையில் இல்லையென்பதையும். K. S ஐயாத்துரை & கோ 68, பாங்ஷால் வீதியில் சொந்தமாக வியாபாரம் நடத்துகிறேன் என்பதையும் எனது ஆதரவாளர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்படிக்கு
K. S. ஐயாத்துரை
68, பாங்ஷால் வீதி,
யாழ்ப்பாணம். 499

### கனிஷ்ட பாடசாலைத் தராதரப்பத்திர பரீட்சை

கார்த்திகை 1965

வடமாகாண ஆசிரிய சங்கத்தினால் நடாத்தப்படும் இப்பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் பாடசாலை மாணவர்களிடமிருந்து 10-9-1965 க்கு முன்னாகவும், தனிப்பட்ட பரீட்சார்த்திகளிடமிருந்து 31-8-1965 க்கு முன்னாகவும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்பப் பத்திரங்களைக் கீழ்க்காணும் விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

1965 ம் ஆண்டுக்குரிய பாடத்திட்டங்கள், ஆகியன பற்றிய கருத்துக்களை 31-8-1965 க்கு முன் தெரிவிக்கும் வண்ணம் கல்லூரி அதிபர்களும் மற்றையோரும் வேண்டப்படுகின்றனர்.

பரீட்சை சம்பந்தமான கடிதங்கள் யாவும் கீழ்க்காணும் விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்

சொ. பாலகிருஷ்ணன்,
கௌரவ காரியதரிசி,
வ. மா. ஆ. க. பரீட்சைக்குழு
லோட்டன் வீதி,
மானிப்பாய்.
8—8—1965 808

### பட்ஜட் விவாதத்துக்கு எதிர்க்கட்சி தயார்

பம்பலப்பிட்டி, புதன்

எதிர்க்கட்சியின் சார்பில் முன்னாள் நிதிமந்திரிகள் பட்ஜட் விவாதத்தை ஆரம்பித்து வைத்து முடித்து வைப்பார்கள்

எதிர்க்கட்சித் தலைவர்கள் நேற்றுக் கூடியபொழுது டாக்டர் என். எம். பெரேரா பட்ஜட் விவாதத்தை ஆரம்பிக்க வேண்டுமென்றும் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா முடித்து வைக்கவேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

சென்ற விவாதங்கள் போலல்லாது எல்லா விஷயங்களும் சிறந்த முறையில் விவாதிக்கப்பட்டு முடிவுகள் எடுக்கப்படல் வேண்டும் என்றும் இக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இதனை செயற்படுத்த எதிர்க்கட்சி அங்கத்தவர்கள் குறிக்கப்பட்டு பிரகாரம் விவாதத்தில் பங்கு பற்றிக்கொள்ள வேண்டும் என்றும் ஒரு அட்டவணை இக்கூட்டத்தில் தயாரிக்கப்பட்டுள்ளது.

### கல்வி அமைச்சு வெளியிட்டுள்ள தகவல்

பம்பலப்பிட்டி, புதன்

கூட்டரசாங்கத்தினால் சில பாடசாலைகளுக்கு கட்டடங்கள் அமைக்க சென்றவருடம் நிதி ஒதுக்கப்படவில்லை என்ற தகவலை கல்வி அமைச்சு தற்பொழுது வெளியிட்டுள்ளது.

கீழ்க்கண்ட தொகுதிகளுக்கு வடக்கு கிழக்கு மாகாணங்களில் நிதி ஒதுக்கப்படவில்லை.

உடுப்பிட்டி, சாவகச்சேரி, வட்டுக்கோட்டை, ஊர்காவற்றுறை, பருத்தித்துறை, காங்கேசன்துறை, கிளிநொச்சி, உடுவில், வவுனியா, மட்டக்களப்பு, பட்டிருப்பு, [illegible],

## கரைச்சிக் கிராமசபையை பட்டினசபையாக்க ஆட்சேபம்

யாழ்ப்பாணம், வெள்ளி

கரைச்சிக் கிராம சபையை பட்டின சபை ஆக்கப்படுவதன் மூலம் கரைச்சிப் பகுதி இன்றிருக்கும் முன்னேற்ற அபிவிருத்தி நிலைக்குக் காரணமாயிருந்த கிராமப் பகுதிகள் தாழ்ந்த நிலைக்குக் கொண்டு வரப்படும். இதனால் புதிய குடியேற்ற வாசிகளுக்கும் ஏனைய கிராமிய மக்களுக்கும் மாபெரும் அநீதி இழைப்பதாகவிருக்கும் என்னும் தீர்மானம் கரைச்சிக் கிராம சபையால் விசேட [illegible] நிறைவேற்றப்பட்டு [illegible] ஸ்தாபன மந்திரி அவர்களுக்கும், திருச்செல்வம் [illegible] நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களைச் சமர்ப்பிப்பதெனவும் கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டது.

கிராம சபைத் தலைவர் திரு. வி. ஆனந்தசங்கரியின் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட சில தீர்மானங்கள் வருமாறு:-

கரைச்சிக் கிராம சபைக்குட்பட்ட பகுதிகள் பெரும்பாலும் புதிய குடியேற்றத்திட்டப் பகுதிகளாகும் புதிய குடியேற்றத்திட்டப் பகுதிகளானமையால் இப்பகுதிகள் நல்ல முறையில் அபிவிருத்தியடையாது பிற்போக்கான நிலையிலேயே இருந்து வருகின்றன. இப்பகுதிகள் அபிவிருத்தியடைந்து முன்னேறுவதற்கு அத்தியாவசியமான பொருளாதார வருவாய் தரக்கூடிய பொதுச் சந்தைகள், சினிமாக் கொட்டகைகள், கடைகள் ஆகியன நிறுவப்பட்டிருக்கவில்லை. அவற்றை நிறுவுவதற்குரிய நிலங்களும் இன்னும் ஒதுக்கிக் கொடுக்கப்படவில்லை. ஆனால் இப்பகுதிகளிலிருந்து அறவிடப்படும் வரிப்பணங்களைக் கொண்டு கிளிநொச்சிப் பட்டணப் பகுதியே பெருமளவு முன்னேற்றமும், அபிவிருத்தியும் அடைந்து வந்திருப்பது கண்கூடு. இந்நிலையில் ஏற்கனவே கிராமப்புற வருவாயால் அபிவிருத்தியடைந்துள்ள பட்டினப் பகுதியை பிரித்து பட்டினசபை ஆக்கும், உத்தேச பட்டின சபைப் பகுதி தவிர்ந்த கிராம சபைகளுக்குட்படும் ஏனைய குடியேற்றத் திட்டப் பகுதிகளும் கிராமப் பகுதிகளும் வருவாய் குன்றி தொடர்ந்தும் அபிவிருத்தியின்றி முன்னேற்றமடையாது திக்கற்றதாய் இருக்க வேண்டிய நிலை ஏற்படும் என்பதை ஸ்தலஸ்தாபன மந்திரியின் மேலான கவனத்திற்கு இச்சபை கொண்டுவர விரும்புகிறது.

பல ஆண்டுகளாக கரைச்சிக் கிராம சபையில் கோஷ்டி மனப்பான்மை குடிகொண்டிருந்தமையால் கிராமப் புறங்களில் ஒருவித ஆக்கவேலைகளையும் மேற்கொள்ளாது கிராமவாசிகளையே வஞ்சித்துச் சேர்க்கப்பட்ட கரைச்சிக் கிராமசபை பொது நிதியிலிருந்து சுமார் ஒன்றரை லட்சம் ரூபா ஒரு சிறுபகுதிப் பட்டின மக்களின் நலன் கருதி மின்சார விநியோகத்திற்கென ஒதுக்கப்பட்டிருக்கிறது. இப்பணத்தில் பெரும் பகுதி உத்தேச பட்டின சபை எல்லைக்குப் புறம்பான கிராமிய மக்களுக்குச் சுவறவேண்டியதென்பது குறிப்பிடத்தக்கது இந்நிலையில் பட்டினசபை நிறுவுவது உத்தேசப்பட்டின சபைக்குப் புறம்பான கிராமிய மக்களுக்குச் செய்யும் மாபெரும் துரோகமாகும் என்று இச்சபை கருதுகிறது.

### நிரந்தர தீர்வு...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

[illegible] வந்து, இலங்கை போக்குவரத்துசபையில் தமிழர்களுக்கு அதிக இடம் [illegible] கொடுக்கவேண்டுமென கேட்டுக்கொண்டார். அப்படிப்பட்ட பெரேரா, இன்று தேசியம், ஒற்றுமை பற்றி பேசிவருகிறார் உள்ளொன்று வைத்து புறமொன்று [illegible] அவர்கள் நாங்களல்ல, [illegible] தேர்தலில் கூட்டரசாங்கம் [illegible] எதிராக பலத்த பிரசாரம் நடைபெற்றது. ஆனால் அங்குள்ள 8 தொகுதிகளில் 7 தொகுதிகள் இடதுசாரிகளுக்கே கிடைத்துள்ளது.

#### பிரச்னை தீராது

டாக்டர் என்.எம்.பெரேரா நிதிமந்திரியாக இருந்தபோது தமிழர்களுக்கு அதிக சலுகை செய்வதாகவும் சிங்கள மக்களைக் காட்டிக்கொடுப்பதாகவும் கூறிய, ராஜரத்தின பிலிப் குணவர்த்தன போன்றவர்கள் இன்று தேசிய அரசாங்கத்திலிருக்கின்றார்கள்.

பிரதமர் டட்லியையும் ஜெயவர்த்தனவையும் உண்மையான சாதுகள் என்று நம்பவேண்டாம். வருங்காலத்தில் சூழ்நிலை வேறுவிதமாக மாறினால் மீண்டும் வகுப்புவாதத்தை கிளறுவார்கள். ஆனால் நாங்கள் அப்படிச்செய்யமாட்டோம் தென்பகுதியில் நகரிலும் சரி, கிராமத்திலும் சரி, வீட்டிலும் சரி, மக்களை இரு பிரிவாக பிரித்துள்ளார்கள். தேசிய அரசாங்கத்திற்கு ஆதரவாக ஒரு பிரிவும் இடதுசாரிகளுக்கு ஆதரவாக மற்றபிரிவும் இருக்கின்றார்கள்.

கூட்டரசாங்கத்தின் போது 16 மந்திரிகள் அதிகரித்துவிட்டதாக கூறியவர்கள் இன்று 17 மந்திரிகளை வைத்துள்ளார்கள் இம்மாத இறுதியில் திரு. பொன்னம்பலம் மந்திரியாவதுடன் மந்திரிகளின் எண்ணிக்கை பதினெட்டாக கூடப்போகிறது.

#### இடமாற்றங்கள்

மத்துகம இ. போ. ச. வில் 31 ஊழியர்கள் தூர இடங்களுக்கு இடமாற்றம்செய்யப்பட்டுள்ளார்கள். 10 ஊழியர்கள் தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்கள், இவையெல்லாம் மக்கள் பார்வையிலிருந்து மறைக்கப்பட்டுள்ளது எனது தொகுதியில் இருந்து 200 ஆசிரியர்கள் தூர இடங்களுக்கு இடமாற்றம்செய்யப்பட்டுள்ளார்கள், கணவன் அம்பாறைக்கும், மனைவி அநுராதபுரத்திற்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்கள். இடமாற்றத்தை யிட்டு மகிழ்ச்சியடைகிறேன், ஏனெனில், இடமாற்றம் பெற்று ஆசிரியர்கள் சென்ற இடங்களிலெல்லாம் புதிய இடதுசாரிவாலிப இயக்கங்கள் ஆரம்பித்து அடுத்த தேர்தலுக்கு உதவியளிக்கப்போகிறது.

1956-ம் ஆண்டிற்கு பின் சிறந்த முதலாளித்துவ பட்ஜட்டை நிதிமந்திரி தேர்ந்திருக்கிறார். இதனால் சாதாரண பொதுமக்கள் எவ்வித நன்மையுமடையப்போவதில்லை. அமெரிக்கா எவ்வளவு தொகையான பணத்தை [illegible] இந்நாட்டின் [illegible] தீராது.

### 'விவசாயிகளைப் பாதிக்கிறது'

யாழ்ப்பாணம், வெள்ளி

"வெளிநாட்டிலிருந்து இறக்குமதியாகும் வெங்காயம் உருளைக்கிழங்கு ஆகியன வற்றிற்கு இறக்குமதித் தீர்வையை இல்லாமல் செய்திருப்பதாக வரவு செலவுத்திட்டத்தில் கூறப்பட்டுள்ளது. இது இந்நாட்டிலுள்ள விவசாயிகளைப் பெரிதும் பாதிக்கும் விதத்தில் அமைந்துள்ளது" என்று கன்னாகம் கம்யூனிஸ்ட்கட்சி வாலிபர் சங்கத்தலைவர் திரு. எஸ். விஜயானந்தன் கட்சியின் மாதாந்தக் கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

குறிப்பாக வடபகுதியிலுள்ள விவசாயிகளுக்கு இது பெரும் அநீதியை விளைவிப்பதாகவுள்ளது. வெளிநாட்டு தீர்வை ரத்துச்செய்ததன் காரணமாக இங்குள்ள வெங்காயம், உருளைக்கிழங்கு ஆகிய பொருட்களுக்கு மதிப்பு இல்லாமலே [illegible] விவசாயிகளின் வயிற்றில் மண்ணைப் போடும் விதத்தில் அமைந்துள்ள இவ்வரவு-செலவுத்திட்டம் கண்டிக்க வேண்டியதொன்று என்றும் திரு. விஜயானந்தன் சொன்னார்.

## வரி விளம்பரம்

### கல்வி

B A;, B. Sc Special & General G. A. Q, G. S. Q G. C. E, (A/C & O/L- Arts & Science- G C E A/C — O/L Arts & Science) December 1965 Examination Rapid Revision மாலை நேர வகுப்புகள் பண்டிதமணி உயர்திரு சி. கணபதிப்பிள்ளை அவர்களால் ஆரம்பிக்கப்பட்டு ஒழுங்காக நடைபெறுகின்றன. தூர இடங்களிலுள்ளவர்களுக்காய 8 பாடசாலை விடுமுறைகால வகுப்புக்கள் 12-8-65 காலை 9 மணிக்கு ஆரம்பமாகியது மாணவர்கள் தொகை கண்டிப்பாக வரையறுக்கப்படுமாதலால் உடனே சேருதல் நல்லது. கௌரவ பதிவாளர் வடபிரதேசக் கல்விக்கழகம் நமசிவாயவித்தியாலயம், கொக்குவில், யாழ்ப்பாணம். 789

ஜி. சி. இ. (சாதாரண) வகுப்புகளில் சில இடங்கள் காலியாக உள்ளது. தாமதிக்காமல் சேருங்கள். யுனைடெட் இன்ஸ்ரியூற்ஸ், நெல்லியடி, கரவெட்டி / 107, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 725

ஜி. சி. இ. உயர்தரம் கலை / விஞ்ஞானக் வகுப்புகளுக்குரிய விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. யுனைடெட் இன்ஸ்ரியூற்ஸ், நெல்லியடி, கரவெட்டி / 107, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 731

ஜி. ஏ. கியூ. வகுப்புகள் தற்பொழுது நெல்லியடியிலும் நல்லூரிலும் நடாத்தப்படுகின்றது. சாவகச்சேரி, வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் கெதியில் வகுப்புகள் நடத்த ஒழுங்கு செய்யப்படும், இதில் சேர விரும்புவோர்கள் தாமதமில்லாமல் தொடர்புகொள்ளவும். யுனைடெட் இன்ஸ்ரியூற்ஸ், நெல்லியடி, கரவெட்டி / 107, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 733

### விற்பனைக்கு

பேர்குசன் ராக்டர் மண்வெட்டி 1965-ம் ஆண்டுக்கு லைசென்ஸ், இன்சூரன்ஸ் உண்டு. உடன் பாவிப்புக்கு உகந்தது. 388 காவலர் வீதி யாழ்ப்பாணத்தில் விசாரிக்கவும். தொலைபேசி யாழ்ப்பாணம் 7113. 742

### தட்டச்சு

தட்டச்சு இயந்திரங்கள் பழுது பார்த்துக் கொடுக்கப்படும். தொடர்பு கொள்ளுங்கள் ஜெயசேகரா, கணக்கியற் கல்லூரி, 278, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 771

### கல்லூரி விளையாட்டுப் போட்டி

வட்டுக்கோட்டை, வியாழன்

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் இல்லங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டி சென்ற ஞாயிற்றுக் கிழமை கல்லூரி மைதானத்தில் நடைபெற்றுள்ளது.

வைத்திய அத்தியட்சகர் டாக்டர் சங்கரப்பிள்ளை பிரதம விருந்தினராக் கலந்துகொண்டார். கல்லூரி அதிபர் திரு. சிவகுருநாதபிள்ளை கல்லூரியின் வளர்ச்சியை எடுத்துக் கூறினார்.

திருமதி சங்கரப்பிள்ளை வெற்றிபெற்றவர்களுக்கு பரிசில்கள் வழங்கினார்

### மன்னாரில் மழை

மன்னார். வியாழன்

மன்னார்ப் பகுதியில் கடந்த 8 மாத காலமாக நிலவிய வரட்சிக்கும் பின் மழைபெய்தது. மீண்டும் தொடர்ந்து பெய்வதற்கான அறிகுறிகள் காணப்படுகின்றன. முருங்கன் சிலாவத்துறை, அடம்பன் முதலிய இடங்களில் போதியளவு மழை பெய்துள்ளது. கட்டுக்கரைக்குளத்தில் தண்ணீர் நிரம்பியிருப்பதாலும், மழை பெய்துவருவதாலும் மாதோட்டப் பகுதி விவசாயிகள் சிறுபோக விதைப்பு ஆரம்பிப்பார்களென தெரியவருகிறது.

### சர்வதேச சங்கீத வித்வ அரங்கு

பேர்லின், ஆக. 12

ஜெர்மன் ஜனநாயகக் குடியரசின் வெயிமர் நகரில் 4 வாரங்களாக நடைபெற்ற சர்வதேசச் சங்கீத விவாத அரங்கில் ஜப்பான், சிலி, அவுஸ்திரேலியா உட்பட பல நாடுகளிலிருந்து வந்த சங்கீத மாணவர்கள் 700 பேர் கலந்து கொண்டனர். ஆறுவது ஆண்டாக வருடந்தோறும் தொடர்ந்து நடைபெறும். இந்த சங்கீத அரங்கிற்கு ஜெர்மன் ஜனநாயகக் குடியரசிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் சங்கீத நிபுணர்கள் வந்து இளம் சங்கீத வித்துவான்களுக்குப் பாடம் சொல்லிக்கொடுக்கிறார்கள்

வயலினை மீட்டுவதிற் தனியொரு பாணியைக் கையாளும சோவியத் யூனியனைய சேர்ந்த பிரபல வயலின் வித்வான் மிக்கேல் வெய்மன் கடந்த ஆறு சர்வதேச சங்கீத அரங்குகளிலும் கலந்துகொண்டு தனது விசேஷ பாணியை போதித்து வந்துள்ளார்——

### தமிழில் வேண்டும்

துணுக்காய், வியாழன்

வானொலிப் பெட்டி பாவிப்பாளர்களுக்கு அனுமதி விண்ணப்பப் படிவங்களை சிங்களத்தில் அரசாங்கம் அனுப்புவதால் சிங்களம் தெரியாத தமிழ் மக்கள் இப்படிவங்களை வாசித்தறிய முடியாது பெரும் கஷ்டப்படுவதால் இனிமேலும் இவ்விதம் சிங்களப் படிவங்கள் அனுப்பாது தமிழில் அனுப்பிவைக்குமாறு கிளிநொச்சி எம். பி பண்டிதர் க. பொ இரத்தினம் மேலதிகாரிகளைக் கேட்டுள்ளார்.

### வானொலி நிகழ்ச்சிகள்

வெள்ளி 13-8-65

கொழும்பு

(செய்திகள் காலை 7-15, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 உதயகீதம் 6-50 சைவநற்சிந்தனை 6-55 இஸ்லாமியநற்சிந்தனை, 7-00 துதிப்பாடல்கள், 7-30 [illegible] திரப்பாடல்கள், 8-00 மெல்லிசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை,

மாலை 5-00 பிறந்தினவாழ்த்துக்கள், 5-15 கதாப்பிரசங்கம்,

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 வேல்விழா அஞ்சல், 8-00 ஒலிச்சித்திரம்ச்சி, 9-15 பேச்சு, 9-30 வேல்விழா அஞ்சல்.

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தேசிய அரசாங்க பட்ஜட்

# முதலாளிகளுக்கே ஆதரவானது"

## ஹர்த்தால் தினக் கூட்டத்தில் பீட்டர் கெனமன் கண்டனம்

யாழ்ப்பாணம், வியாழன்

"தேசிய அரசாங்கத்தால் சமர்ப்பிக்கப்பட்ட வரவு—செலவுத் திட்டம் தேசமக்களின் கலீனப் பாதுகாப்பதற்குப் பதிலாக வெளிநாட்டு உள்நாட்டு முதலாளிகளின் கலீனயே முறையாகப் பாதுகாக்கும்" என்று கம்யூனிஸ்ட் கட்சித் தலைவரும் கொழும்பு மத்தியதொகுதி பாராளுமன்ற உறுப்பினருமான திரு பீட்டர் கெனமன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் கோட்டை மைதானத்தில் நேற்று மாலை நடைபெற்ற ஹர்த்தால் நினைவுக் கூட்டத்தில் பேசுகையில்தான் திரு. பீட்டர் கெனமன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இக்கூட்டம் யாழ் மாவட்ட சமசமாஜ — கம்யூனிஸ்ட் கிளைகளால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. திரு ஐ ஆர் அரியரத்தினம் தலைமைவகித்தார்.

### முதலாளிகளின் கைப்பொம்மை!

திரு பீட்டர் கெனமன் மேலும் பேசியதாவது:— 'டி எஸ். சேனநாயக்காவின் ஆதிக்கத்தின்பின்பு இப்போது தான் முதலாளிகளின் கைப்பொம்மையாக மீண்டும் ஒரு அரசாங்கம் அமைந்துள்ளது. மாதம் 500 ரூபாவுக்கு அதிகமாக வருமானம் வரும் 60,000 அதிகமான செல்வந்தர்கள் 5 கோடிக்கதிகமான வரிச்சலுகைகளைப் பெற்றிருக்கிறார்கள். இதற்கு மாறாக சாதாரண பொதுமக்கள் ஒன்றரைரூபாய் வரை ஆண்டுக்கு வரிச்சலுகையாகப் பெறுகிறார்கள்.

### யாருக்கு பலன்?

தீர்வைகள் சில பொருட்களுக்கு குறைக்கப்பட்டிருந்த போதிலும் இத் தீர்வைக்குறைவின் விளைவாக ஏற்பட்ட சலுகையை வியாபாரிகள் அநேகமாக தமதாக்கிக்கொண்டு பொதுமக்களுக்கு எந்தச் சலுகையையும்கொடுக்காமல் விடக்கூடும். நடைமுறையில் தீர்வைக்குறைவு விலைக்குறைவாக அமையுமென்று கூறுவதற்கில்லை. இவ்வியாபாரிகள்தான் இதன் லாபத்தையும் பயனையும் அனுபவிப்பார்கள்.

### பிளவுகள் உண்டு!

தேசிய அரசாங்கம் என்ற போர்வையில் உள்ளேயுள்ள கட்சிகளுக்கிடையே கருத்து வேற்றுமையும் பிளவும் நிறைந்திருக்கின்றன. தமிழரசுக் கட்சியும் தமிழ்க் காங்கிரஸ் கட்சியும் தமக்குள் அடிபட்டுக் கொள்வதுடன் மாத்திரமல்லாமல் தேசிய அரசாங்கத்தின் ராஜாங்க மந்திரி ஜே. ஆர். ஜெயவர்த்தன டொன்பிடா முனைதொடங்கி பருத்தித்துறை வரையும் சிங்களமே அரசாங்க பாஷையாக இருக்கும் என்று சிங்களமக்கள் மத்தியில் உரக்கப் பேசிவருகின்றார். வட இலங்கையில் மந்திரி திருச்செல்வம் வடகிழக்கு மாகாணங்களில் தமிழே நிர்வாக மொழியாக அமையும் என்று பேசி வருகிறார். இரட்டை நாக்குப் படைத்த இந்த அரசாங்கம் இருகுரலில் பேசி தமிழரையும் சிங்களவரையும் ஒரேநேரத்தில் ஏமாற்றிவிட முயல்கிறது. இந்த வகையில் ஏமாற்றித் திரியும் சிங்களத் தமிழ் முதலாளித்தலைவர்களின் பச்சோந்திக் கபட நாட்கங்களை அம்பலப்படுத்துவதே இடதுசாரிக் கட்சிகளின் நோக்கமாகும்.

### ஒப்பந்தம் ஏன் வெளியாகவில்லை?

அரசாங்கம் உண்மையாகத் தேசிய ஐக்கியத்தில் அக்கறை கொண்டிருந்தால் ஐக்கிய தேசியக்கட்சிக்கும் தமிழரசுக் கட்சிக்குமிடையேயுள்ள ஒப்பந்தத்தை ஏன் இலங்கை மக்கள் அனைவரும் அறியச் சொல்லத் தயங்குகிறார்கள்? இதுபற்றி இடதுசாரிகள் கேட்க முற்படும்போது எம்மைப் பார்த்து வகுப்புவாதிகள் என்று கூச்சலிடுகிறார்கள்.

### முதலாளிகளால் முடியாது

உண்மையான தேசிய ஐக்கியத்தைத் கட்டிவளர்ப்பதற்கு 'முதலாளிகளால் முடியாது. வரவு-செலவுத் திட்டத்தினால் நன்மைபெறும் சிங்கள-தமிழ் முதலாளிகள் இந்த அரசாங்கத்தை ஆதரிப்பார்கள். ஆனால் இந்த வரவு-செலவுத் திட்டத்தினால் ஏமாற்றமடையும் சிங்கள-தமிழ் விவசாயிகளும், தொழிலாளிகளும் எமது இடதுசாரி ஐக்கியத்தின் தலைமையின் கீழ் ஐக்கியப்பட்டு உண்மை விடுதலை நோக்கி முன்னேறுவோமாக."

### அனில் முனசிங்கா பேச்சு

முன்னாள் போக்குவரத்து மந்திரியும் அகலவத்தை எம். பி.யுமான திரு. அனில் முனசிங்கா பேசுகையில் கூறியதாவது:

### வகுப்புக் கலகத்துக்குக் காரணகர்த்தாக்கள்

"1958ம் ஆண்டு நடைபெற்ற வகுப்புக்கலவரத்தின் போது தலைமைதாங்கியவர்கள் ஐக்கிய தேசியக்கட்சியினர் என்பதையும், தமிழரை அன்று துன்புறுத்துவதற்குக் காரணகர்த்தாக்களாக இருந்தவர்கள் அவர்கள் என்பதையும் மறந்துவிடக்கூடாது. அன்று தமிழ்மக்களைக் காடையர்களிடமிருந்து காப்பாற்றியது இடதுசாரிகள் என்பதையும் தமிழ் பேசும்மக்கள் மறந்துவிடக் கூடாது. அப்படிப்பட்ட எம்மைப் பார்த்து இன்று ஐக்கிய தேசியக்கட்சியினர் வகுப்புவாதிகள் என்கின்றனர். நாமா வகுப்புவாதிகள்? அன்று ஐக்கிய தேசியக்கட்சி வகுப்புவாதத்தைக் கிளப்பியபோது முதலாளித்துவப் பத்திரிகைகள் வாய்மூடி மௌனிகளாக இருந்தன. இன்று இடதுசாரிகள் எதுவும் செய்யாதிருக்க வகுப்புவாதிகள் என்கின்றனர்."

திரு. அ. விசுவநாதன் பேசுகையில் 1953ம் ஆண்டு ஐக்கிய தேசியக்கட்சி அரிசி விலையைக் கூட்டியபோது அதற்காகப் போராடி வெற்றிகண்டோம். அதை நினைவுகூருமுகமாகவே இன்று இந்த ஹர்த்தால் கூட்டத்தை நடத்துகிறோம் என்று கூறினார்.

அரிசி விலையை அன்று கூட்டிய முதலாளித்துவக் கட்சியான ஐக்கிய தேசியக்கட்சியும், சில பிற்போக்குக் கட்சிகளும் சேர்ந்து அரசாங்கம் அமைத்திருக்கின்றன. 1953ம் ஆண்டு நடத்திய ஒரு போராட்டம் போன்றே இன்றும் ஐக்கிய தேசியக்கட்சியை எதிர்த்துப் போராடவேண்டிய ஒரு நிலைமையில் இருக்கிறோம் என்றும் திரு. விசுவநாதன் சொன்னார்.

# பாகிஸ்தான் தரப்பில் 240 பேர் பலி

# காஷ்மீர் சண்டையில் மாண்டவர் தொகை 270 என அறிவிப்பு

## ஸ்ரீநகர்-ஜம்மு ரஸ்தா தொடர்பு இருக்கிறதாம்

ஸ்ரீநகர், ஆக 11

ஜம்மு காஷ்மீரில் போரோய்வுக் கோட்டுக்கு அருகில் நடைபெற்ற இரண்டு நாள் சண்டையில் 240 பாகிஸ்தானியர்களும் 29 இந்திய துருப்புகளும் கொல்லப்பட்டதாக கடைசியாகக் கிடைத்த உத்தியோக பூர்வமான செய்திகள் கூறுகின்றன.

ஊடுருவல் செய்த பாகிஸ்தானியர்களைக் கண்டுபிடிப்பதில் இந்திய துருப்புக்கள் தீவிரமாக ஈடுபட்டுள்ளன இன்று காலையிலிருந்து சண்டை நடைபெறவில்லை.

### துப்பாக்கிச் சண்டை

ஸ்ரீநகருக்கு வெளிப்புறங்களில் இன்று அதிகாலை வரை அங்குமிங்கும் விட்டு விட்டுத் துப்பாக்கிப்பிரயோகம் நிகழ்ந்தது. ஏராளமான வெடிமருந்துகளும், துப்பாக்கிகளும், ராக்கெட்டுகளும் மற்றும் சிறியரக இயந்திரத் துப்பாக்கிகளும் ஸ்ரீநகருக்கு அண்மையில் இந்தியத் துருப்புகள் கண்டுபிடித்திருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஊடுருவல் செய்த பாகிஸ்தானியர்கள் வசம் பெருமளவு பாரத செலாவணி இருந்ததென்றும் டிரான்ஸிஸ்டர் வானொலிகளைக் காஷ்மீர் மக்களுக்குக் கொடுத்து அவர்களின் மனதை மாற்றுவதில் இவர்கள் ஈடுபட்டிருந்தனர் என்றும் செய்திகள் கூறுகின்றன.

### சேத விபரம்

இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை கிடைத்த தகவலின்படி சேதவிபரம் வருமாறு:

பாகிஸ்தான் தரப்பு: உயர் அதிகாரிகள் இரண்டு பேர். பாகிஸ்தான் துருப்புகள் 85 பேர், முஜாகிட்டீன்கள் 3 பேர், மற்றவர்கள் 150 பேர்.

இந்தியத் தரப்பு: ஒரு அதிகாரி, 7 துருப்புகள், 21 பொலிஸ்வீரர்கள்.

இவர்களைத் தவிர ஏராளமான பாகிஸ்தான் ஊடுருவல்காரர் கைதுசெய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டிருப்பதாக இந்திய வானொலி அறிவித்துள்ளது.

ஜம்மு காஷ்மீரில் பொலிஸ் அதிகாரிகளின் சகல விடுமுறைகளும் ரத்துச்செய்யப்பட்டிருக்கின்றன.

# எங்கே நிறுத்துவது?

கோண்டாவில், புதன்

காங்கேசன்துறை பிரதான வீதியில் பஸ் நிறுத்த குறிகள் பொறித்த அறிவிப்புகள் இல்லாததால் பிரயாணிகள் மட்டுமல்லாது இப்பாதைக்குப் புதிதாக வரும் சாரதிகளும் கஷ்டப்படவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளதாக அறியப்படுகிறது. இதனால் குறிப்பிட்ட ஒரு இடத்தில் இறங்கவேண்டிய பிரயாணி அறிவிப்பு மணியை அடித்தும் இடமறியாத சாரதி இறங்கவேண்டிய இடத்தைவிட்டு வேறோர் இடத்தில் நிறுத்துவதால் பிரயாணிகள் மிகவும் கஷ்டமடைகிறார்கள். முன்பு இப்பகுதி வீதிகளில் பல தரிப்பு குறிகள் இருந்திருந்தன. ஆனால் மழையினாலும், வாகனப் போக்குவரத்தினாலும் அக்குறிகள் அழிந்துவிட்டன.

# அமைதி

[illegible] ஆக 11

[illegible] பாட்னாவிலும் பீகாரிலும் இன்று அமைதி நிலவியதாக இன்றிரவு அறிவிக்கப்பட்டது.

# நிதிமந்திரியின் வானொலி உரை

பம்பலப்பிட்டி, புதன்

"தேசிய அரசாங்கத்தின் தற்போதைய கடமை மிகவும் சிக்கலான தொன்றாகும். பொருளாதார அபிவிருத்தி தடைப்பட்டு நிற்கும் இக்கட்டத்தில் நாங்கள் புதியதோர் வழியை வகுக்க வேண்டியிருக்கின்றது" என்று நிதிஅமைச்சர் திரு யு பி வன்னிநாயகா 'பட்ஜட்' குறித்த நேற்றிரவு வானொலியில் பேசுகையில் கூறினார்.

தொடர்ந்து அவர் குறிப்பிட்டதாவது: அரசாங்கம் மிகவும் பிரதானமான பொறுப்பை ஏற்று இச்சந்தர்ப்பத்தில் வெளிநாட்டினதும் உள்நாட்டினதும் நிதியை போதியளவு அபிவிருத்தி செய்யவேண்டியிருக்கின்றது.

கடந்த காலங்களில் நாட்டின் பொருளாதாரநிலை மிகவும் மோசமான நிலையை அடைந்திருந்தது. உற்பத்தியும் வேலையில்லாத் திண்டாட்டமும், வாழ்க்கைச்செலவும் உயர்ந்து கொண்டேசென்றது. இவற்றையெல்லாம்விட கொடிய குளுவனியும், வரட்சியும் மக்களை வதைத்ததோடு பொருளாதார வளர்ச்சியையும் தடைசெய்துள்ளது.

தனியார்துறையைப் பொறுத்தமட்டில் அரசாங்கம் அபிவிருத்திசெய்யவேண்டிய உதவிகளைத் தற்பொழுது செய்ய முன்வந்துள்ளது. அத்துடன் தனிப்பட்டவர்களின் சேமிப்பையும் கருதி வரிக்கட்டுப்பாடுகளை மாற்றியமைக்கவும் அரசாங்கம் உத்தேசித்துள்ளது."

# கல்விக் கழகத்தின் தீர்மானம்

யாழ்ப்பாணம், வியா.

வடபிரதேச ஆசிரிய சங்கத்தால் நடத்தப்படும் வடபிரதேச கல்விக் கழகம் இன்று முதல் விடுமுறைக்கால வகுப்புக்களை கொட்டடி நமசிவாய வித்தியாலயத்தில் நடாத்துவதெனத் தீர்மானித்துள்ளது.

# கல்லூரியில் சைக்கிள் திருட்டு

மாவிட்டபுரம், புதன்

தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரியில் கல்விப்பயிலும் எம். இந்திரநாதன் என்பவருடைய சைக்கிள் ஒன்று கல்லூரி நேரத்தில் களவு போய்விட்டதாக பொலிஸில் புகார் செய்துள்ளனர். சைக்கிள் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. "இத் திருட்டு" சம்பந்தமாக சுன்னாகம் சப இன்ஸ்பெக்டர் இராசநாயகம் விசாரணைகள் நடத்துனர்.

# 'சிங்கப்பூர் குடியரசாகும்'

சிங்கப்பூர், ஆக, 11

சிங்கப்பூர் விரைவில் குடியரசு நாடாகிவிடுமென்று சிங்கப்பூர்பிரதமர் திரு லீ-குவான்-யூ இன்று இங்கு பத்திரிகை நிருபர்களுக்கு அளித்த பேட்டியொன்றில் தெரிவித்தார்.

# ஐயாறன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

செய்து, அதை எழுதியவருக்கு இலவச பிரயாண வசதியைச் செய்வதாகவும் அடிகளார் தெரிவித்தார்கள்.

கொழும்பு விவேகானந்த சபை இருபிரதிநிதிகளை அனுப்பி வைக்கத் தீர்மானித்துள்ளதாக காகோஷங்களுக்கிடையே அறிவிக்கப்பட்டது. வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் சார்பாக ஒரு பிரதிநிதி செல்கிறாராம். அக் கூட்டத்திலிருந்த பலரும் இம் மகாநாட்டில் கலந்துகொள்ள மிக ஆர்வம் காட்டினர்.

இலங்கை அரசாங்கத்திடம் பேசி, இம் மகாநாட்டுக்கு வர ஈழப் பிரதிநிதிகளுக்கு விசேஷ அனுமதி கிடைக்க முயற்சி செய்யப்படுமென்று அடிகளார் தெரிவித்தார். ஈழத்திலே தமிழ்த் துறையில் ஈடுபட்ட சில சிங்கள அன்பர்களும் இம் மகாநாட்டுக்குச் செல்லக்கூடும்.

இம் மகாநாடு பற்றிய பல துண்டுப் பிரசுரங்களும், கூட்டத்தில் விநியோகிக்கப்பட்டன. இதுபற்றி மேற்கொண்டு விபரம் அறிய விரும்புபவர்கள், தனிநாயக அடிகளார், மலாயா சர்வகலா சாலை, கோலாலம்பூர் மலேஷியா என்ற விலாசத்துக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம். ஈழத்திலிருந்து பலர் இதில் கலந்துகொள்வரென்றே எதிர்பார்க்கின்றனர்.

* * *

வேண்டத் தக்க தறிவோய் நீ வேண்ட முழுதுந்தருவோய் நீ, வேண்டும் அயன் மாற் கரியோய் நீ வேண்டி என்னைப் பணி கொண்டாய், வேண்டி நீயா தருள் செய்தாய் யானும் அதுவே வேண்டின் அல்லால், வேண்டும் பரிசொன்றுண்டென்னில் அதுவும் உன்றன் விருப்பன்றே.

— மாணிக்கவாசகர்

# ரசாயனத் தொழிற்சாலையில் திருட்டு

சாவகச்சேரி, வியா

பரந்தன் ரசாயன தொழிற்சாலையிலிருந்து சுமார் நாலாயிரம் ரூபா பெறுமதியான "கேபிள்"கள் திருட்டுப்போய் விட்டன.

இதுசம்பந்தமாக கிளிநொச்சிப்பொலிசார் புலன்விசாரணை செய்துவருகின்றனர்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 13-ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org